Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 07 ஞாயிற்றுக்கிழமை (23.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 054

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## ஜனாதிபதியுடன் கலந்துரையாடி மீனவர் விடுதலைக்கு நடவடிக்கை

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி குடா நாட்டு மீனவர்களது விடுதலை தொடர்பில் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் யாழ். செயலகமான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமைச் செயலகத்திற்கு நேற்றைய தினம் வருகை தந்த போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் கைது செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள யாழ். கடற்றொழிலா

(19) ஆம் பக்கம் பார்க்க



## யாழ்ப்பாண மீனவர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்குங்கள்

### ஜனாதிபதியிடம், கௌசால் கோரிக்கை

போதைப்பொருள் கடத்தினர் என்ற குற்றச்சாட்டின்பேரில் இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்களும் விடுதலை செய்யப்படவேண்டுமென காணாமற் போனோர் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் அமைக்கப்பட்ட சர்வதேச ஆலோசனைக்குழுவின் இந்திய உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய மீனவர்களை மாத்திரம் விடுவித்து இலங்கையர்களை விடுவிக்காமல் விடும் தெரிவுசெய்யப்பட்ட விடுதலைத் தன்மை இந்த விடயத்தில் கூடாது என்று அவிடாஸ் கௌசால் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே ஜனாதிபதி மஹிந்த



ராஜபக்ச, குறித்த 3 மீனவர்களையும் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுவரைக்கும் குறித்த இலங்கையர்கள் மாத்திரம் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்படாமையா

(19) ஆம் பக்கம் பார்க்க

# இலங்கையில் ஸ்திரமற்ற நிலையை உருவாக்க முயல்கிறது சர்வதேசம்

## அமைச்சர் நிமால் எச்சரிக்கை



இலங்கையில் பிரச்சினைகளை உருவாக்கி ஸ்திரமற்ற நிலையை உருவாக்க சர்வதேச நாடுகள் முயற்சிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுப்பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இந்த விடயம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர்களாக பதவி வகித்த பலர் கடந்த காலங்களிலும் கட்சியை விட்டுச் சென்றிருந்ததாக சுட்டிக் காட்டினார்.

மக்களின் செல்வாக்குமிக்க கட்சி என்ற வகையில் பொதுச் செயலாளரின் வெளியேற்றத்தால் மக்கள் செல்வாக்கிற்கு பாதிப்பு ஏற்படாது என அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களிலும் ஸ்ரீலங்கா

(19) ஆம் பக்கம் பார்க்க

## மரப்பொம்மை அரசை அமைக்க சர்வதேச நாடுகள் முயற்சி

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாடுகள் சில இலங்கையில் மரப்பொம்மை அரசாங்கமொன்றை அமைப்பதற்கு முயற்சிக்கின்றன.

இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவதற்கு சர்வதேச நாடுகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சுதந்திரக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் டளஸ் அழகப்பெரும மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது.

அரசியல் அமைப்பு தொடர்பான நிலைப்பாட்டை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஏற்கனவே தெளிவு படுத்தியுள்ளது.

நாட்டுக்கு உகந்த அரசியல்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசிலிருந்து விலகியவர்களை மீளவும் அழைக்கிறார் பசில்

அரசாங்கத்தில் இருந்து விலகிச் சென்ற குழுவினரை மீண்டும் அரசாங்கத்துடன் ஒன்றிணையுமாறு அமைச்சர் பசில் ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்றையதினம் கொலன்னாவ ஜனாதிபதித் தேர்தல் செயற்பாட்டு அலுவலக திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

விஷேடமாக ஜனாதிபதித் தேர்தலை உத்தியோகபூர்வமாக அறிவித்ததன் பின்னர், நாள் மாத்தரமின்றி எதிர்க்கட்சி வேட்பாளரையும் தெரிந்து கொண்டு நான் திறக்கும் முதலாவது அலுவலகம் இதுவாகும். மதகுருவே அந்த சங்கீத நாற்காலி போட்டி போன்று சுற்றி வந்தனர். இதில் யார் அமருவார்கள் என்று. நாங்கள் நினைத்தது போன்று யாரும் அமரவில்லை. அவர்களுக்குத் தெரியும் அந்த சரத் பொன்சேகாவிற்கு நடந்தது போலவே நடக்கும் என்று. சிலரை பலவந்தமாக அமரச் செய்ய

(19) ஆம் பக்கம் பார்க்க

## எதிர்க்கட்சிகளின் கூட்டணி "அபேஜாதிக பெரமுண"

எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டணிக்கு 'அபே ஜாதிக பெரமுண' என பெயர் வைக்க இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்த கலந்துரையாடலின் போது சுமார் பத்துப் பெயர்கள் பரிசீலனை செய்யப்பட்ட போதிலும் அபே ஜாதிக பெரமுண என்ற பெயர் பொருத்தமாக இருப்பதாக தெரிவிக்கப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பொது எதிரணியின் பின்னால் வெளிநாட்டு சக்திகளா?

### பொய் என்கிறார் மைத்திரிபால

பொது எதிரணியின் பின்னாலோ பொது வேட்பாளராகிய எனக்குப் பின்னாலோ, எந்த விதமான வெளிநாட்டு சக்திகளும் இல்லை என்பதை உறுதிபடக் கூறுகின்றேன். நாட்டு மக்களின் நலனுக்காகவே நாங்கள் இணைந்திருக்கின்றோம். இதனைக் குழப்புவதற்காக எம்மீது தேவையில்லாமல் பழி போடுகிறார்கள் என பொது எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றின் நேரடி நிகழ்ச்சியில் நேற்றிரவு கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனவரி 8ஆம் திகதியில்

(19) ஆம் பக்கம் பார்க்க

Nestle MILO
மைலோ
கிண்ணத்திற்கான
இறுதி யுத்தம் இன்று
விபரங்கள் - உள்ளே...



# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணியளவில் கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும் என நா.கனகலிங்கம் அறிவித்துள்ளார்.


வாழ்க வளமுடன்

பெயர் :கு.விதுஷாந்

முகவரி :வேலணை மேற்கு வேலணை



அகவை 04 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


# மக்களின் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் கூட்டுறவுத்துறையை வளர்க்க வேண்டும்

## வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு சட்டதிட்டங்களையும் அதிகாரங்களையும் எமது மக்களின் பயன்பாட்டுக்கு ஏற்றவகையில் வடக்கு மாகாண சபை முன்னெடுக்க வேண்டுமென மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம் பெற்ற வடமாகாண கூட்டுறவு ஊழியர தொழிற்சங்கத்தின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆதாயத்தை மட்டும் நோக்காகக் கொண்டு ஏனைய நிறுவனங்கள செயற்படும் நிலையில், கூட்டுறவுத்துறை மட்டுமே சமூக மேம்பாட்டையும், பொருளாதாரத்தையும் முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது.

மாகாண சபை அதிகாரத்தின் கீழ் 31 விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், கூட்டுறவும் அதில் ஒன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆனால், தமக்கு எவ்வித அதிகாரங்களும் இல்லை என்றும், இதனால் வடமாகாண சபையை சரியாகச் செயற்படுத்த முடியாமல் இருக்கிறது என்றும் இந்தியாவிலும் உள்ளூரிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உண்மைக்குப் புறம்பாகக் கூறி வருகின்றனர்.

இதனால், எமது மக்களுக்கும் எவ்விதமான பயன்களோ, நன்மைகளோ கிடைக்கப் போவதில்லை என்பதுடன், இருக்கின்ற அதிகாரங்களை எமது மக்களின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான செயற்திட்டங் களுக்காக முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்துடன், கூட்டுறவுத்துறையை சரியாக நெறிப்படுத்தி, நடைமுறைப்படுத்தவும் வேண்டும் என்பதுடன், மாகாண சபையின் சட்ட ஏற்பாடுகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்தி, கூட்டுறவாளர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது, மூன்று கோரிக்கைகள் தொடர்பில் வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஏற்கனவே என்னுடன் கலந்துரையாடியுள்ளாரகள். அதன் பிரகாரம், மாகாண சபையின் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதங்களுக்கு அப்பால், மக்களின் நலன்சார்ந்து ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் என்பதுடன், அதற்காக மத்திய அரசின் அனுசரணையையும் தான் பெற்றுத் தருவதாகவும் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளால் கூட்டுறவு ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை 50 வீதத்தால் அதிகரித்தல், கூட்டுறவு ஊழியர்களை நிரந்தரப் பணியாளர்களாக உள்வாங்குதல், கூட்டுறவு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை முன்னெடுத்தல் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 310

திகதி - 2014.11.21

வர்ணம் - நீலம்

வெற்றி இலக்கங்கள் | ஆங்கில எழுத்து

24 25 33 60 V

பரிசுத் தொகை ரூபா. 17,853,100/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 07 | 350,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 206 | 206,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 369 | 369,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9025 | 541,500/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4648 | 185,920/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 119038 | 2,380,760/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17277 | 345,540/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 17,853,100/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,378,720/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 18,085,540/-

2014.11.25ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.

தொ.பே: 011 2333546/47

web : www.dlb.lk


# 22 நாட்களில் 131 பேர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இந் மாதம் 22 நாட்களில் 131 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக யாழ். போதனா வைத்திய சாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து மூவரும் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து மூவருமென ஆறு பேர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதுடன் இந்த வருடத்தில் நேற்று வரை 829 பேர் டெங்குத்தாக்கம் காரணமாக இவ் வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். (பா)


டயானா பிளாஸ்ரிக்

நீசைக்கிள் (மீள் சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108 பலாலி வீதி யாழ்ப்பாணம் (இலுப்பையடிச் சந்தி அருகாமை)

021 222 8680, 077 592 5088.

(C/3727)



மனமுவந்து பாராட்டுகிறோம்







இலங்கை போக்குவரத்து சபையில் சாரதி, காப்பாளர் நியமனம் பெற்றுத் தந்து எமது வாழ்வின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி எமது குடும்பத்தினரை ஒளி மயமாக்கிய

கௌரவ K. N. டக்ளஸ் தேவானந்தா ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம்,

பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் அவர்களுக்கும்,

கௌரவ சில்வெஸ்ரர் அலன்ரின் (உதயன் தோழர்) யாழ்மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர் அவர்களுக்கும், K.V. குகேந்திரன் (K.V. ஜெகன்) யாழ் மாவட்ட அமைச்சின் ஒருங்கிணைப்பாளரும்,

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கும்,

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதேச அமைப்பாளர்களுக்கும், வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

புதிதாக நியமனம் பெற்ற சாரதிகள், காப்பாளர்கள் இ.போ.ச. (வடக்கு), யாழ்ப்பாணம். 22.11.2014

(C/3474)

# கல்விமான்களை உருவாக்கிய பாடசாலையாக பெருமையடைகிறது

## முதல்வர் நந்தகோபன் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

நவாலி சென்ற் பீற்றர்ஸ் பாடசாலை 134 வருடங்களில் பல கல்வியியலாளர்கள், பொருளியியலாளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றும் கல்விமான்களை உருவாக்கிய பாடசாலையாக 2015 இல் 135 ஆவது ஆண்டு விழாவினை முன்னிறுத்தவுள்ளது.

இப்பாடசாலையில் இருந்து வெளியேறி பல்வேறு துறைகளிலும் முன்னிற்பவர்களின் உதவியுடன் 135 ஆவது ஆண்டை பெருவிழாவாக கொண்டாட முனைகின்றேன்.

இவ்வாறு சென்ற்பீற்றர்ஸ்றோ.க.த.க.பாடசாலை முதல்வர் க.நந்தகோபன் தெரிவித்துள்ளார்.

135 ஆவது ஆண்டுவிழா தொடர்பான நவாலி சமூகமட்ட தலைவர்களுக்கான கூட்டம் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் சிறப்பு விளக்கவுரை செய்த அதிபர் க.நந்தகோபன் மேலும் தெரிவிக்கையில்,

1881 இல் கிறிஸ்தவ பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 2014 வரை சமூகத்திற்கு உன்னதமானவர்களை தேர்ந்தெடுத்துள்ளது.

இவ்வாறு நவாலி சென்ற்.பீற்றர்ஸ் பாடசாலையூடாக வெளியேறிய பல ஆயிரம் பேர் இன்று பலதுறைகளில் விற்பன்னர்களாக உள்ளனர்.

இவ்வாறான விற்பன்னர்களை நாம் 135 ஆவது ஆண்டு விழாவில் வாழ்த்தி விருதுகளை வழங்கவுள்ளோம்.

இதனைவிட 135 ஆவது ஆண்டு மலர், கண்காட்சி, ஆசிரியர் கௌரவிப்பு மற்றும் பல செயற்பாடுகளை முன்னெடுக்கவுமுள்ளோம்.

இந் நிகழ்வில் வடமாநில முன்னாள் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் முன்னாள் அதிபர் சி.நாகையா, நவாலி சமூக சேவகி திருமதி அருளம்மா மற்றும் சமூக சேவையாளர் தேவதாசன், ஊன்றுகோல் அறப்பணியக தலைவர் க.நாகலிங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் பிரதி அதிபர் திருமதி செ.தருமசீலன் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட விரிவுரையாளர் ரட்ணத்தினதும் அவருடைய மகனுடையதுமான இரண்டு நூல்கள் நேற்றுமுன்தினம் மதியம் பல்கலைக்கழகத்தில் வெளியிட்டுவைக்கப்பட்டபோது... (48)

# மரக்கன்றுகளை வெட்டியகற்றும் வீதி துப்புரவுப் பணியாளர்கள்

(யாழ்ப்பாணம்)

கே.கே.எஸ்.வீதி காப்பற் வீதியாக செப்பனிடப்பட்ட பின்னர் வீதியோரங்களில் உள்ள குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளிற்கு முன்னால் நிழல்தரு மரக்கன்றுகளை நாட்டியிருந்தன.

வீதி துப்புரவுப்பணியில் ஈடுபட்டு வரும் பணியாளர்கள் புற்களுடன் சேர்த்து குடியிருப்பாளர்களால் நாட்டப்பட்ட நிழல் தரு மரக்கன்றுகளையும் வீதிகளில் வெட்டியகற்றிவருகின்றனர்.

இச்சம்பவம் யாழ்ப்பாணம் - கே.கே.எஸ்.வீதியில், கோண்டாவில் மேற்கு, இணுவில் பகுதிகளில் இடம் பெற்று வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதி துப்புரவுப் பணியாளர்களின் இத்தகைய விஷமத்தமான செயலால் நிழல்தருமரங்களை நாட்டியோர் விசனமடைந்துள்ளனர். வீதி துப்புரவுப் பணியாளர்களிற்கு மேற்பார்வையாளர்கள் போதிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் என பொதுமக்கள் கேட்டுள்ளனர். (06)

# பயனாளிக்கு கண்வில்லை

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் ஒரு பயனாளிக்கு முதியோர் செயலகத்தால் கண்வில்லை வழங்கப் படவுள்ளது.

இதில கரணவாய் கிழக்கை சேர்ந்த சண்முகநாதன் இராஜேஸ்வரி என்பவருக்கே கண்வில்லை வழங்கப் படவுள்ளதுடன் இவரை கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

# கரவெட்டியில் 3 பயனாளிகளுக்கு வாழ்வாதார கொடுப்பனவு

கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் வாழ்வாதார ரீதியாக பின்தங்கியுள்ள 3 பயனாளிகள் சுயதொழில் கொ்டுப்பனவுக்காக தெரிவாகியுள்ளனர்.

சமூக சேவை திணைக்களத்தினால் யுனிசெவ் திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கும் தலா 36 ஆயிரம் ரூபா வீதம் 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதன்படி தெரிவான பயனாளிகளாக சி.சுதர்சான - வதிரி கரவெட்டி, த.ஆனந்தராசா - மண்டான் கரணவாய் மேற்கு, ஞா.சரஸ்வதி - கரவெட்டி கிழக்கு ஆகியோர் கரவெட்டி பிரதேச சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ கேட்டுள்ளார்.

# பதில் சொல்லக் கடமைப்பட்டோர் - 02




அரசியலைப்பற்றிக் கதைக்கிறதுக்கு ஆயிரமாயிரம் ஆட்கள் இருக்கினம்.

அரசியலைத் தீர்மானிக்கிறதுக்கு?

இதுதான் பிரச்சினையே. ஒப்பீட்டளவில் ஏனைய சமூகத்தினரை விட ஈழத்தமிழர்கள்தான் அதிகளவுக்கு அரசியலைப்பற்றிக் கதைக்கிற ஆட்கள்.

அரசியலைப்பற்றிச் சிந்திக்கிறவையும் இவைதான்.

ஆனால், அரசியல்லை கோட்டை விட்டவையும், கோட்டை விட்டுக்கொண்டிருக்கிறவையும் இவைதான்.

ஏனெண்டால், இவைதான் அதாவது அரசியலைப் பற்றி ஓயாமல் சிந்திக்கிற, கதைக்கிற ஆட்களில கனபேர் உருப்படியாக ஒரு காரியமும் செய்யிறேல்ல. நல்ல காரியங்களைச் செய்யிறதுக்கு முன்னுக்கு வாறேல்ல. சில காரியங்களைச் செய்யிறதுக்கு துணிய வேணும். தங்களை அர்ப்பணிக்க வேணும். அப்பிடியெல்லாம் செய்யிறதுக்கு இவையால ஏலாது.

இதால இவை என்ன செய்யினம் எண்டால், புத்தி சொல்லிற மாதிரி. ஆலோசனை கூறுகிற மாதிரி, ஆராய்ச்சிகளைச் செய்யிற மாதிரி ஒரு பாவனையைக் காட்டுகினம்.

இப்பிடிக் காட்டுகிற ஆட்களின்ரை தொகை இப்ப கூடிக்கொண்டு போகுது.

1980 களில அள்ளுகொள்ளையாக – ஆயிரக்கணக்கான பெடியளும் பெட்டைகளும் இயக்கங்களுக்குப் போய்க்கொண்டிருந்தினம். இயக்கங்களுக்குப் போறதெண்டால், ஏதோ சும்மா விசயமில்லை.

உயிராபத்துகளைச் சந்திக்கிற காரியம். உயிரையும் கொடுக்க வேண்டி வரும் எண்டு தெரிஞ்சு கொண்டே களத்தில் இறங்குகிற விசயம்.

இப்பிடியான ஒரு அணி – ஆயிரக்கணக்கான இளைய தலைமுறை தமிழ்த்தரப்பில ஒரு முப்பது வருசம் இருந்தது.

இதுக்குள்ளையும் சுழிச்சுக்கொண்டு படிச்சுப் பட்டம் பெற்று, உத்தியோகம் எடுத்து, பதவி உயர்வுகளை எடுத்துப் பெரிய இடங்களில இருக்குது இன்னொரு கூட்டம்.

அதாவது கொந்தளிக்கும் நெருப்புச் சட்டிக்குள்ளையே தப்பிப்பிழைச்ச ஆட்கள்.

இதைப்போல இந்தப் பெரிய தியாகக் காலகட்டத்தில செய்யாத காரியம் எல்லாம் செய்து, நிக்காத இடமெல்லாம் நிண்டு, பார்க்காத ஆட்களையெல்லாம் பார்த்து, விழாத காலில எல்லாம் விழுந்து இப்ப அரசியல்ல பெரிய ஆட்களாக நிக்குது இன்னொரு கூட்டம்.

கரும்புலிகளையும் மாவீரர்களையும் ஏற்றிப்போற்றிக் கொண்டே தாங்கள் புலித்தோல் போர்த்திய நரிகளாக வாழுது இன்னொரு கூட்டம். (மாவீரர் குடும்பங்களுக்கு ஒரு சிறிய அளவுக்குக் கூட உதவி செய்யத்தயாரில்லாத ,வை மரம் நடுகிறது தொடக்கம், மாவீரர்நாள் கொண்டாடுறது வரையில கச்சை கட்டிக்கொண்டு முன்னுக்கு நிக்கிறதைப் பார்க்கோணும். கேவலம். இப்பிடியுமொரு நாய்ப்பிழைப்பா எண்டுதான் கேட்கத் தோன்றும்).

பல்கலைக்கழகத்தில படிக்கும் வரையில புரட்சியும் போராட்டமும் மாவீரர் நினைவும் திருவிளக்கேற்றலும் பொங்கு தமிழும் எண்டு நிக்கிற பெடியள் – பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழகத்தை விட்டிட்டு வெளியேறினால்... தங்கட சொந்த அலுவல் எண்டு என்.ஜீ.ஓக்களுக்குப் பின்னாலையும் அரச நிறுவனங்கள், அதிகாரிகள், அரசாங்க அரசியல்வாதிளுக்குப் பின்னாலும் திரியிற காட்சி.

அந்த நேரம் புரட்சியும் போராட்டமும் போர்க்கோலமும் பொய்யாய் பழங்கதையாய்ப் போய்.... இப்ப மெய்யாய்ச் சொந்த அலுவற் பார்க்கப் பேராவல் கொண்டோராய்....

அப்பப்பா... இந்த மாதிரி ஆயிரம் உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இப்பிடி இருக்கிற பல்கலைக்கழக மாணவர்களிடம் சில கேள்விகள் –

1. பல்கலைக்கழக மாணவர்களாகவும் மாணவர் ஒன்றியங்களாகவும் இருக்கிற நீங்கள் இதுவரையில – அதாவது இந்தப் போர் முடிஞ்ச பிறகு தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு ஆற்றிய அரசியல் – சமூகப் பணிகள் என்ன?
2. போரினால் பாதிக்கப்பட்ட மக்களில் எத்தனைபேருக்கு நீங்கள் உதவிகளைச் செய்திருக்கிறீர்கள்? அந்த உதவிகள் என்ன வகையானவை?
3. நீங்கள் விரும்பிய – இன்னும் விரும்பிக்கொண்டிருக்கிற போரினால் ஆயிரக்கணக்கான போராளிகளும் பொதுமக்களும் ஊனமுற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு உங்கள் உதவிகள் கிடைக்கின்றனவா?
4. ஒரு காலம் மாணவர்களாக இருந்தவர்களில் அநேகர் இன்று உத்தியோகம் பார்த்துச்சம்பாதிக்கிறவர்களாக இருக்கிறீர்கள். ஒரு தொகையினர் வெளிநாடுகளுக்குப் போய் ஓரளவு வசதியாகவும் வாழுகிறீங்கள். இப்பிடி இருக்கிற நீங்கள், உங்கள் விருப்பங்களுக்காகத் தியாகம் செய்த சனங்களுக்காக என்ன செய்தீர்கள்?
5. ஏராளம் இளம்பெண்கள் தங்கள் கணவர்களைப் போர்க்களத்தில் இழந்திருக்கினம். இவர்களில் எத்தனைபேரை உங்களில் எத்தனைபேர் மறுமணம் செய்திருக்கிறீங்கள்?
6. மாவீரர் குடும்பங்களில் எத்தனைபேர் சீதனம் இல்லாமல் திருமணம் செய்திருக்கிறியள்? இனியாவது அப்பிடிச் செய்ய எத்தனைபேர் தயாராக இருக்கிறியள்?

நம்பிக்கை என்பது புயல் காற்றில் துவண்டு விழும் மெல்லிய மலரல்ல அது அடிபெயரா இமயம் போன்றது. - காந்திஜி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மறதி மட்டும் இல்லையென்றால்...

நமக்கு இந்த மறதி மட்டும் இல்லையென்றால் எவ்வளவு சித்திரவதைப்பட்டுப் போவோம் என்பதை யோசிக்க உண்மையில் தலைசுத்துகிறது.

பார்த்த துக்கங்கள், இழந்த உறவுகள் பிரிவுகள், காண நேர்ந்த கொலைகள் அழிவுகள், ஏமாற்றுக்கள் வஞ்சனைகள்... மறதி மட்டும் இல்லையென்றால் இவையெல்லாம் நம்மை எப்போதும் எப்படி உயிர்போகும் வதையாக வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும்!

அதெல்லாம் கூட போகட்டும். நமக்கான அரசியல் தீர்வு எப்படி எப்படி எல்லாம் வந்துவிடும் என்று காலத்துக்குக் காலம் இந்தத் தலைவர்கள் சொல்லிவந்தவை ஞாபகத்தில் இருந்து கொண்டிருக்குமென்றால், நம்பிக்கையோட வாழ எவ்வளவு சிரமப்படுவோம்.

ஒபாமா வந்தால் சரிவரும், கமரூன் ஊருக்கு வந்து திரும்பிப் போனபிறகு சரிவரும், இதோ நம்ம மோடி வந்துவிட்டார் இனிச் சரிவரும், நவிப்பிள்ளையம்மா போகுமுன்னர் விஷயம் சரி வந்துவிடும், தென்னாபிரிக்காவும் இறங்குகிறது சரிவந்துவிடும்... என்றெல்லாம் தலைவர்கள் சொல்லிக்கொண்டிருந்ததை இப்பவும் நினைத்துக்கொண்டிருந்தால், சங்கடமாக இருக்காதா?

இதோ ஜனாதிபதித் தேர்தலோடு பெரிய மாற்றம் வரப்போகிறது. அதன்பிறகு நம் தமிழரசுத் தலைவர்கள் பேசித் தீர்வு காண்பதற்கு ஒருதடையுமிருக்காது... பல்லைக்கடித்துக்கொண்டு ரண்டு மாதம் பொறுத்திருந்தால் எல்லாம் சரிவந்துவிடும் என்று நம்புவதற்கும் மறதிதானே நமக்கு வாய்த்த கடவுள்!

கடந்த மனிதஉரிமைப் பேரவை மாநாடுகளில் எல்லாம் எங்களுக்குத் தரப்பட்ட எதிர்பார்ப்புகள் என்னவாயின என்பதை மறக்காவிட்டால் இதோ வரப்போகும் அடுத்த ஜெனீவாத் திருவிழாவில் புதிதாக நம்பிக்கை கொள்ள முடியுமா?

நடந்து முடிந்த இறுதியுத்தத்தின் போது அமெரிக்கா பிரிட்டன் உள்ளிட்ட இந்தச் சர்வதேச நாடுகள் எல்லாம் எப்படி நடந்து கொண்டன; என்னென்ன கொள்ளிகளை எடுத்துக் கொடுத்தன என்பதை மறவா விட்டால் இன்று வெள்ளந்தியாக சர்வதேசத்தைக் கொண்டாடி நம்பிக்கை கொள்ள முடியுமா?

அவ்வளவு ஏன், கடந்த தேர்தலில் தலைவர்கள் சொன்ன வாக்குறுதிகளை–தந்த நம்பிக்கைகளை எல்லாம் மறக்க முடியாமற் போனால், நமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அவர்கள் திரும்பவும் "உண்ணாவிரதத்திற்கு வா, ஆர்ப்பாட்டத்திற்கு வா" என்று அறைகூவும்போது டென்சனாகிவிட மாட்டோமா!

அதிகம் வேண்டாம்! எமதருமை மாவையாரைப் பாருங்கள். இதோ ரண்டு மாதத்துக்கு முந்தி அவர் விடுத்த சூளுரைகளையும், வரும் ஜனவரியிலிருந்து தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் மூலம் தீர்வைக் கண்டபிறகுதான் அடுத்த அலுவல் என்ற அந்த அவரது முழக்கங்களையும்...

அவரே தொடர்ந்தும் தன் நினைவில் வைத்திருந்தால் அவரால் தொடர்ந்து அரசியல் செய்ய முடியுமா? அல்லது நாங்கள் தான் உடனுக்குடன் மறந்துவிடாமல் அதை நம்பிக் கொண்டிருந்தால் ஏமாற்றத்தில் மனச்சோர்வு அடைந்துவிட மாட்டோமா?

எனவே இந்த மறதிக்குணத்தை நாம் விரும்பி நம்மிடம் வைத்திருக்கத்தான் வேண்டும். தலைவர்கள் புதிது புதிதாக ஏமாற்றுக்களைச் சொல்லிச் சொல்லி வர நாமும் புதிது புதிதாகக் கேட்டு நம்பிக்கையோடும் மகிழ்வோடும் காத்திருக்க வேண்டாமா!

எப்படி இருந்த நாம் இப்படி ஆகிவிட்டோம்! என்று வருத்தப்பட்டுக் கொள்ளப் பல்வேறு சங்கதிகள் இருந்தாலும், நம்மிடமுள்ள இந்த மறதிக் குணத்திற்காக மகிழ்ச்சிப்படாமல் இருக்க முடியாது.

- ஆசிரியர்



## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும்செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களின் பிரதிபலிப்பே."

——மகாத்மா காந்தி (இந்திய தேசபிதா)

# எதிர்க்கட்சிகளின் கூட்டணி

# புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவில்

## புதிய தேர்தல் சின்னமும் தயாராகிறது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் பொது வேட்பாளரை அறிமுகம் செய்திருந்தது. முன்னாள் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிட உள்ளார். தேர்தலில் போட்டியிடுவதற்காக புதிய கூட்டணி ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். எதிர்வரும் நாட்களில் கூட்டணி தொடர்பில் கட்சிகளுக்கு இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட உள்ளது. ஜனாதிபதி தேர்தலில் என்ன சின்னத்தின் கீழ் போட்டியிடுவது என்பது குறித்தும் தீர்மானிக்கப்படும் எனவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கூட்டணிக்கான பெயர் மற்றும் சின்னம் தொடர்பில் ஏற்கனவே இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மூடிய அறைக்குள் இரகசிய பேச்சு சிறிகோத்தாவில் நடந்தது என்ன?

(கொழும்பு)

எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவுக்கும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் மூடிய அறையில் இடம் பெற்ற இரகசியப்பேச்சுக்களின் விபரம் என்ன என்பது குறித்து இப்போது தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் சர்ச்சை கிளம்பியுள்ளது.

எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளார்.

தாம் பொதுவேட்பாளராக போட்டியிடுவதாக அறிவித்த பின்னர் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கவை சந்திப்பதற்காக ஸ்ரீகோத்தா சென்றார்.

இதன் பின்னர் இரண்டு தலைவர்களும் மூடிய அறைக்குள் பல்வேறு விடயங்கள் தொடர்பில கலந்துரையாடிதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் பின்னர் ரணில் விக்கிரமசிங்க, சந்தோசமான வெளிப்பாட்டை காட்டியதாக கட்சி தரப்புக்கள் தெரிவித்தன.

## வசந்த சேனாநாயக்கவுக்கும் ஆப்பு; கட்சி உறுப்புரிமை பறிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனாநாயக்கவின் கட்சி உறுப்புரிமைக்கு உடன் அமுலாகும் வகையில் தடை விதிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிக்கையொன்றின் மூலம் அனுர பிரியதர்ஷன யாப்பா குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஏற்கனவே மைத்ரிபால சிறிசேன, ராஜித சேனாரத்ன, துமிந்த திசாநாயக்க, எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்தன ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமைகளுக்கும் உடன் அமுலாகும் வகையில் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அவர்கள் வகித்த அனைத்து பதவிகளில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளதாகவும் அதில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## விதிகளை மீறும் சாரதிகள்; எஸ்.எம்.எஸ். மூலம் குற்றப்பத்திரம்

### பரீட்சார்த்த நடவடிக்கை விரைவில்

வீதி ஒழுங்கு விதிமுறைகளை மீறும் வாகனங்களுக்கான அபராதப் பத்திரங்களை சாரதியின் கையடக்க தொலைபேசிக்கு குறுந்தகவலினூடாக (SMS) அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வருட இறுதிக்குள் இச்செயல்முறை நடைமுறைக்கு கொண்டுவரப்படும்இதனையடுத்து சாரதிகள் தமக்கான அபராதப் பணத்தினை தபால நிலையங்களிலோ அல்லது தமது கையடக்க தொலைபேசி கட்டணத்துடனோ செலுத்த முடியுமெனவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

குறுந்தகவல்களை அனுப்புவதற்காக கையடக்க தொலைபேசி நிறுவனங்களிடமிருந்து கேள்விப் பத்திரம் கோரப்படவிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். அதனைத் தொடர்ந்து வெகு விரைவில் கிரடிட் கார்ட் மூலம் ஸ்தலத்திலேயே அபராதம் செலுத்தும் முறைமையினை அறிமுகப் படுத்துவது குறித்து பொலிஸ் திணைக்களம் ஆராய்ந்து வருகின்றதெனவும் அவர் குறிப்பிட்டார்.

வீதி ஒழுங்கு முறைகளை மீறிய சிறு குற்றச்செயல்களுக்கான அபராதத்தினை செலுத்துவதற்காக அநேகமான சாரதிகள் தமக்கு உள்ள ஒரு நாள் விடுமுறையிலும், தூர இடங்களிலிருந்து கொழும்பு வருகின்றனர். இதன் மூலம் சாரதிகள் எதிர்நோக்கக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்க்கும் நோக்கிலேயே குறுந்தகவல் மூலம் அபராதம் செலுத்தும் செயன்முறையினை நடைமுறைப் படுத்த தீர்மானித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மைத்திரியின் இடத்திற்கு கம்லத் நியமனம்

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொலன்னறுவை மாவட்ட அமைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான சிறிபால கம்லத், நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலன்னறுவை மாவட்ட அமைப்பாளராக கடமையாற்றிய மைத்திரிபால சிறிசேன் நேற்றுமுன் தினம் வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக அறிவித்ததைத் தொடர்ந்தே சிறிபால கம்லத் அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# தீர்வுக்கு வழிகாட்டும் தலைமையே தமிழ் மக்களின் இன்றைய தேவை

**சங்கர சிவன்**

தமிழ் மக்களின் அரசியல் எப்போதும் இப்படியே இருக்கப் போகின்றதா?

தங்கள் பிரதிநிதிகளாகத் தமிழ் மக்கள் தொடர்ச்சியாகத் தெரிவு செய்கின்ற தலைமை அம்மக்களின் எந்தப் பிரச்சினையையும் தீர்த்து வைக்கவில்லை என்பதாலேயே இக்கேள்வி எழுகின்றது. தமிழ் மக்களின் பிரச்சினையை அடிப்படைப் பிரச்சினை, அன்றாடப் பிரச்சினை என்று இரண்டு வகையாக நோக்கலாம். இனப் பிரச்சினை தான் அடிப்படைப் பிரச்சினை. இராணுவப் பிரசன்னம், காணி கையகப்படுத்தல் போன்ற அன்றாடப் பிரச்சினைகள் இனப்பிரச்சினை தீர்க்கப்படாததன் விளைவுகள். எனவே, தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முன்னுரிமை அளித்துச் செயற்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு நாளுக்கு நாள் சிக்கலாகி வந்திருக்கின்றது. ஒரு காலத்தில் சமஷ்டித் தீர்வுக்கு ஆதரவளிக்கத் தயாராக இருந்த சிங்கள மக்கள் மத்தியில் நியாயமான அரசியல் தீர்வுக்கான ஆதரவு இப்போது வெகுவாகக் குறைந்துவிட்டது. தமிழ்த் தலைவர்களே இந்த நிலைக்குப் பிரதான காரணம். தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக் கோரிக்கையைக் கணிசமான சிங்கள மக்கள் பிரிவினை முயற்சியாகப் பார்க்கக்கூடிய வகைச் செயற்பாடுகள் மற்றும் வீராவேசப் பேச்சுக்கள் மூலம் தமிழ்த் தலைவர்கள் இந்த நிலையைத் தோற்றுவித்திருக்கின்றார்கள். அதனால் இனப்பிரச்சினையின் தீர்வு சாத்தியமில்லை என்ற முடிவுக்கு நாம் வரக்கூடாது. சாத்தியமான வழியில் தீர்வுக்காக முயற்சிக்க வேண்டும். வெளிநாடொன்று வந்து தீர்வைப் பெற்றுத் தரும் என்பதெல்லாம் ஒருபோதும் நடக்க முடியாத கற்பனை. தீர்வுக்காக நாங்கள் தான் முயற்சிக்க வேண்டும். யதார்த்தத்தை விளங்கிக்கொண்டு முயற்சிக்க வேண்டும்.

அரசியல் தீர்வு தொடர்பாக இரண்டு விடயங்கள் முக்கியமானவை. முழுமையான அரசியல் தீர்வை ஒரே தடவையில் பெற முடியாதென்பது ஒரு விடயம். பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்க மேலான தீர்வு சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெற வேண்டுமென்பதால் அரசியல் தீர்வுக்குச் சிங்கள மக்களின் பங்களிப்பு முக்கியமானதென்பது மற்றைய விடயம்.

சிங்கள மக்களின் பங்களிப்பை பெறுவதற்கேற்ற அணுகுமுறையை நாம் பின்பற்ற வேண்டும். ஐக்கிய இலங்கையில் தீர்வு காண்பதையே விரும்புகின்றோம் என்பதைச் சொல்லிலும் செயலிலும் உணர்த்த வேண்டும். கூட்டமைப்புத் தலைவர்கள் பேச்சில்தான் அதைச் சொல்கின்றார்கள். செயலில் இல்லை. சாதாரண சிங்கள மக்களுக்கு ஆத்திரமூட்டும் விதத்திலேயே தமிழ்த் தலைவர்களின் செயற்பாடுகள் இருக்கின்றன. சிங்கள மக்கள் மத்தியில் செயற்படும் முற்போக்கான அரசியல் சக்திகளுக்கூடாகவே அம்மக்களின் ஆதரவைப் பெறுவது சாத்தியமென்பதால் அந்த அரசியல் சக்திகளுடன் நட்புறவை வளர்க்க வேண்டியது அவசியம். கூட்டமைப்பு இதில் கவனம் செலுத்துவதாக இல்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு முண்டு கொடுப்பதிலேயே இவர்களின் கவனம் செல்கின்றது.

> ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு தான் கூட்டமைப்பின் நிலைப்பாடென்றால் அதற்கான தீர்வுத் திட்டத்தை முதலில் முன்வைக்க வேண்டும். அந்தத் தீர்வுத் திட்டத்தை வலியுறுத்தி வெகுஜன இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும். கூட்டமைப்பில் உள்ள தனிநாட்டுச் சிந்தனையாளர்களைக் களையெடுக்க வேண்டும். இவற்றைச் செய்வதற்குக் கூட்டமைப்பு முன்வராதிருப்பது ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்பதில் கருத்தீடுபாடு இல்லாததையே வெளிப்படுத்துகின்றது.

நாளாந்தப் பிரச்சினைகள் விடயத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தங்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றுகின்றது என்பதைத் தமிழ் மக்கள் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

புலிகளுடன் இணைந்து தனிநாடு பெற்றுத் தருவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தருவதாக மக்களுக்கு நம்பிக்கையூட்டியே கூட்டமைப்பு அரசியல் களத்துக்கு வந்தது. சந்திரிகாவின் சமஷ்டித் தீர்வுத் திட்டத்தை நிராகரித்ததும் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக அங்கீகரித்ததும் இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே. புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின் ஜனநாயக அரசியலுக்கு வந்தவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வு எது என்பதையிட்டுத் தடுமாறுகின்றார்கள். தனிநாட்டு நிலைப்பாட்டைக் கைவிடவும் முடியாமல் அரசியல் தீர்வை நோக்கிச் செயற்படவும் முடியாமல் இரண்டுங்கெட்ட நிலையில் கூட்டமைப்பு இருக்கின்றது. புலம்பெயர் அமைப்புகளின் அழுத்தமும் கூட்டமைப்புக்குள் சிறிதரன் போன்றவர்களின் தனிநாட்டு நிலைப்பாடும் அரசியல் தீர்வுக்கான செயற்பாட்டை முன்னெடுப்பதற்குத் தடையாக இருக்கின்றன. அதே நேரம், சில சட்டப் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வையே நாடுவதாகச் சொல்கின்றார்கள். ஆனால் அதற்கான செயற்பாடு இல்லை.

ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று உச்ச நீதிமன்றத்திலும் ஊடக அறிக்கைகளிலும் சில கூட்டமைப்புத் தலைவர்கள் கூறியதைத் தமிழ் ஊடகங்கள் தூக்கிவைத்துச் சிலாகிக்கின்றன. ஐக்கிய இலங்கையிலேயே தீர்வு என்று இலங்கைக்கு மாத்திரமன்றி உலகத்துக்கே கூட்டமைப்பு பிரகடனப்படுத்தியிருப்பதாக இவை கூறுகின்றன. அந்தப் பிரகடனத்துக்கு அமைவான செயற்பாட்டை ஏன் மேற்கொள்ளவில்லை என்பது பற்றி இந்த ஊடகங்கள் கவனம் செலுத்துவதில்லை. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு தான் கூட்டமைப்பின் நிலைப்பாடென்றால் அதற்கான தீர்வுத் திட்டத்தை முதலில் முன்வைக்க வேண்டும். அந்தத் தீர்வுத் திட்டத்தை வலியுறுத்தி வெகுஜன இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும். கூட்டமைப்பில் உள்ள தனிநாட்டுச் சிந்தனையாளர்களைக் களையெடுக்க வேண்டும். இவற்றைச் செய்வதற்குக் கூட்டமைப்பு முன்வராதிருப்பது ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்பதில் கருத்தீடுபாடு இல்லாததையே வெளிப்படுத்துகின்றது.

அரசியல் தீர்வுக்கு விரோதமான அரசியலை மக்களிடமிருந்து மறைப்பதற்காகக் கூட்டமைப்புத் தலைமை எவ்வித தயக்கமும் இல்லாமல் தமிழ் மக்களை ஏமாற்றத் தொடங்கியது. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறினார்கள். அது எவ்வாறான தீர்வு என்று சொல்லவில்லை. இலங்கையின் அரசியலமைப்பு ஏற்பாடுகளை ஒதுக்கித் தள்ளிவிட்டுச் சர்வதேச சமூகம் எப்படித் தீர்வைப் பெற்றுத் தரும் என்பதையும் சொல்லவில்லை. அந்த நாட்டுத் தூதுவர் அப்படிக் கூறினார் என்றும் இந்த நாட்டுத் தூதுவர் அப்படிக் கூறினார் என்றும் சர்வதேச சமூகம் தீர்வுத் திட்டத்துடன் உன்னிப்பாக அவதானிக்கின்றது என்றும் தலைவர்கள் அவிழ்த்துவிட்ட பொய்களை மக்கள் நம்பினார்கள். அவையெல்லாம் ஏமாற்று என்பது இப்போது விளங்கத் தொடங்கிவிட்டது.

அரசாங்கமே தீர்வை முன்வைக்க வேண்டும் என்று இப்போது சொல்கின்றார்கள். இது மக்களை ஏமாற்றுவதற்கான இன்னொரு முயற்சி. பதின்மூன்றாவது திருத்தம் தான் எங்கள் தீர்வு என்று அரசாங்கம் கூறினால் அதை ஏற்றுக் கொள்வார்களா? அரசாங்கம் என்ன தீர்வை முன்வைத்தாலும் அது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கவில்லை எனக் கூறி நிராகரிப்பதன் மூலம் அரசியல் தீர்வைத் தவிர்ப்பதே கூட்டமைப்பின் நோக்கம். அதற்காகவே அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். அரசியல் தீர்வில் உண்மையான அக்கறை இவர்களுக்கு உண்டென்றால் நடைமுறைச் சாத்தியமான ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்து விட்டு மாற்றுத் தீர்வை முன்வைக்குமாறு அரசாங்கத்துக்குக் கூறவேண்டும்.



இனப்பிரச்சினையும், நாளாந்தப் பிரச்சினையும் உணர்ச்சியூட்டும் ஆவேசப் பேச்சுக்கள் மூலமும் மக்களை ஏமாற்றும் கதைகள் மூலமும் தீர்க்க முடியாது. ஆவேச ஆர்ப்பாட்டங்களும் ஒரு நாள் சத்தியாக்கிரகங்களும் கூட்டமைப்புத் தலைவர்களின் வாக்கு வங்கியைத் தக்கவைப்பதற்கு உதவலாமேயொழியப் பிரச்சினைகளின் தீர்வுக்கு உதவப் போவதில்லை. சரியான அணுகுமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் இவற்றுக்குத் தீர்வு காண முடியும் என்பதற்கு நடைமுறை உதாரணம் உண்டு. இந்த வழியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாளாந்தப் பிரச்சினைகளுக்குக் கணிசமான தீர்வைப் பெற்றுத் தந்திருக்கின்றார். இணக்க அரசியல் மூலம் இனப்பிரச்சினைகளுக்குப் படிப்படியாகத் தீர்வைப் பெறலாம் என்ற நம்பிக்கையை அவர் தோற்றுவித்திருக்கின்றார். அதேபோல, மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்றுச் செயற்படுத்திக் கொண்டு மேலதிக அதிகாரங்களைப் பெறுவதன் மூலம் அரசியல் தீர்வை அடையலாம் என்ற நிலைப்பாட்டையும் அவர் வெளிப்படுத்தி வருகின்றார்.

படிப்படியாகவே அரசியல் தீர்வை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதுதான் இன்றைய யதார்த்தம். மாகாண சபை அதற்கான ஆரம்ப கட்டமாக உள்ளது. மாகாண சபையைச் சரியான முறையில் செயற்படுத்திக் கொண்டு படிப்படியாக மேலதிக அதிகாரங்களைப் பெற்று அரசியல் தீர்வை நோக்கி முன்னேறலாம். வடமாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் கூட்டமைப்பு அதைச் செயற்படுத்த விரும்பவில்லை. பொருத்தமற்றவையும் பொய்யானவையுமான காரணங்களைக் கூறி மாகாண சபையை முடக்குகின்றது. இவ்விரு விடயங்களிலும் கூட்டமைப்பின் செயற்பாடு அரசியல் தீர்வுக்குக் குந்தகமாகவே உள்ளது.

அடிப்படைப் பிரச்சினையான இனப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலும் ஆவேசப் பேச்சுக்கள் மூலம் மக்களுக்கு உணர்ச்சியூட்டித் தங்கள் சுயநல நோக்கங்களை நிறைவேற்றும் தலைமையை நம்பினால் எந்தப் பிரச்சினையும் எந்தக் காலத்திலும் தீரப்போவதில்லை. ஆக்கபூர்வமான அணுகுமுறையின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தரக்கூடிய தலைமையின் பக்கம் தமிழ் மக்கள் திரும்ப வேண்டிய காலம் வந்துவிட்டது. ●



> **சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறினார்கள். அது எவ்வாறான தீர்வு என்று சொல்லவில்லை. இலங்கையின் அரசியலமைப்பு ஏற்பாடுகளை ஒதுக்கித் தள்ளிவிட்டுச் சர்வதேச சமூகம் எப்படித் தீர்வைப் பெற்றுத் தரும் என்பதையும் சொல்லவில்லை. அந்த நாட்டுத் தூதுவர் அப்படிக் கூறினார் என்றும் இந்த நாட்டுத் தூதுவர் அப்படிக் கூறினார் என்றும் சர்வதேச சமூகம் தீர்வுத் திட்டத்துடன் உன்னிப்பாக அவதானிக்கின்றது என்றும் தலைவர்கள் அவிழ்த்துவிட்ட பொய்களை மக்கள் நம்பினார்கள். அவையெல்லாம் ஏமாற்று என்பது இப்போது விளங்கத் தொடங்கிவிட்டது.**

# அமைச்சரவையில் அவசர மறுசீரமைப்பு

(கொழும்பு)

அமைச்சரவையில் அதிரடி மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு நெருக்கமான வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எதிர்க்கட்சியுடன் இணைந்து கொண்ட ஆளும் கட்சி அமைச்சர்கள் பிரதி அமைச்சர்களின் பதவிகள் பறிக்கப்பட்டுள்ளன.

இந்த அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்களை இரத்து செய்யக்கூடிய வகையிலான திருத்தமொன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் வாரத்திற்குள் புதிய அமைச்சரவை நியமிக்கப்படவுள்ளது. சில தேர்தல் தொகுதிகளுக்கு புதிய தொகுதி அமைப்பாளர்களையும் ஆளும் கட்சி நியமிக்கத் தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில முக்கிய பதவிகளிலும் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருணாகல் மற்றும் மாத்தளை மாவட்ட தொகுதி அமைப்பாளர்களுக்கு பதிலாக புதிய அமைப்பாளர்களை நியமிக்க கடந்த 19 ஆம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானம் வாபஸ் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# ரணிலுக்கு இப்போது இரண்டு "மைத்திரி"

## மகிந்த கிண்டல்



(கொழும்பு)

ரணிலுக்கு தற்போது இரண்டு 'மைத்திரிகள்' உள்ளனர். ஒருவர் வீட்டுக்குள் இருக்கும் அவரது மனைவி, மற்றவர் வெளியே. அவர்தான் மைத்திரிபால. இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவரின் மனைவி மைத்திரியையும், பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவையுமே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி வேறுவழியின்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த ஒருவரையே பொதுவேட்பாளராக நியமிக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது திஸ்ஸ அத்தநாயக்க எமது கட்சிக்கு வந்து போட்டியிடுவதைப் போன்றது. சரத் பொன்சேகா போன்று மைத்திரி சிக்குப்பட்டுள்ளார் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்

## பொதுச் செயலாளராக யாப்பா



(கொழும்பு)

அமைச்சர் அனுரபிரியதர்ஷன யாப்பா ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இதுவரை அக்கட்சியின் பொதுச் செயலாளராகச் செயற்பட்டு வந்த மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம், எதிரணி பொது வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவித்தார். இதனையடுத்து அவர் வகித்து வந்த சுகாதார அமைச்சுப் பதவி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் வகித்து வந்த பதவிகள் என்பனவற்றில் இருந்து நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# எதிரணி வேட்பாளர் தெரிவு மறுபக்கம் என்ன?

## மேற்குலக இலக்கு எது?

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் தெரிவு தொடர்பான பேச்சுவார்த்தைகள் செய்மதி தொலைபேசி ஊடாக மிக இரகசியமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்கத்தைய நாடு ஒன்றின் தூதரகத்தினால் இந்தப் பேச்சுவார்த்தைகளுக்குத் தேவையான செய்மதி தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் உயர் மட்டத்தினர் ஆளும் கட்சியிலிருந்து தாவக் கூடியவர்களை கண்காணித்து வந்த காரணத்தினால், பேச்சுவார்த்தைகள் மிகவும் இரகசியமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்படுவதனை தடுக்கும் நோக்கில் இவ்வாறு விசேட செய்மதி தொலைபேசிகளை முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தரப்பினர் பயன்படுத்தியுள்ளனர்.

பொது வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்து, ஆட்சி அதிகாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியில் குறித்த தூதரகம் முக்கிய பங்கு வகித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் முன்னாள் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன ஆகியோர் ஊடாக பொது வேட்பாளர் தொடர்பிலான பேச்சுவார்த்தைகளும் இணைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொது வேட்பாளர் தெரிவு தொடர்பிலான பேச்சுவார்த்தைகளுக்கான பயணங்களை மேற்கொள்ள இலக்கத் தகடு மாற்றப்பட்ட அதி சொகுசு ஜீப் வண்டியொன்றும், மோட்டார் கார் ஒன்றும் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஹக்கீமுக்கும் அழைப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்ஂம் தம்முடன் இணைந்து பணியாற்ற முன்வரவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே,

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

அரசமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இன்று சுயாதீனம் பற்றி பேசுகின்றது. அளுத்கம சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படும் எனக் கூறப்பட்டது.

அது தற்போது எங்கே? எனவே, செய்த தவறுகளைத் திருத்திக்கொள்வதற்காக எம்முடன் வந்து சேருமாறு நான் நீதியமைச்சர் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்ஂக்கு அழைப்பு விடுக்கின்றேன். இன்னும் மொத்தமாக 60 பேர் அரசு பக்கமிருந்து ஐ.தே.கவுடன் இணையவுள்ளனர் என்றார்.

# யார் இந்த மைத்திரிபால?



(கொழும்பு)

பெலவத்த கமராலகே மைத்ரிபால யாப்பா சிறிசேன 1951 ஆம் ஆண்டு, செப்ரெம்பர் 3 ஆம் திகதி பொலன்நறுவையில் பிறந்தார்.

இவர்களது குடும்பம் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டிருந்தது.

உள்ளூர் பாடசாலை ஒன்றில் ஆரம்பக் கல்வியைப் பயின்ற மைத்திரிபால சிறிசேன, 1973 ஆம் ஆண்டில் கண்டி குண்டசாலை விவசாயக் கல்லூரியில், விவசாயப் பாடநெறி ஒன்றைப் பயின்றார்.

அதன் பின்னர் கிராம சேவை உத்தியோகத்தராகவும் சிறிது காலம் பணியாற்றியிருந்தார்.

மாணவர் பருவத்திலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூர் இளைஞர் அணி செயற்பாட்டாளராக இருந்துள்ள மைத்திரிபால சிறிசேன, 1970 ஆம் ஆண்டுகளின் இறுதியில் அந்தக் கட்சியின் தீவிர உள்ளூர் அரசியல் குழுக்களில் அங்கம் வகித்துள்ளார்.

அதன் பின்னர், 1980 களின் தொடக்கத்திலிருந்தே கட்சியின் தேசிய மட்ட அமைப்புகளின் முக்கிய பதவிகளை வகிக்கத் தொடங்கினார்.

இதில் 1982 ஆம் ஆண்டில் அகில இலங்கை இளைஞர் அணித் தலைவராகவும் பின்னர் கட்சியின் பொலிட் பீரோவிலும் உறுப்பினரானார்.

1989 ஆம் ஆண்டு, தனது 38 ஆவது வயதில் பொலன்நறுவை மாவட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

அதன்பின்னர் நடந்த அனைத்து தேர்தல்களிலும் வெற்றிபெற்று நாடாளுமன்றதுக்கு வந்துள்ளார் மைத்திரிபால சிறிசேன.

பின்னர், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994 ஆம் ஆண்டில் அமைத்த அரசாங்கத்தில் துணை நீர்ப்பாசனத்துறை அமைச்சராக நியமனம் பெற்ற மைத்திரிபால, மூன்று ஆண்டுகளில் கெபினட் அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியொன்றுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் துணைச் செயலாளராகவும் வளர்ச்சி கண்டார்.

பின்னர், அடுத்த மூன்று ஆண்டுகளில் கட்சியின் துணைத் தலைவராக நியமனம் பெற்ற இவர், 2004 ஆம் ஆண்டில் சந்திரிகா தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செய லாளராகவும் நியமனம் பெற்றார்.

அதன்பின்னர், தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைக் காலத்திலும் அதே பதவிநிலையில் நீடித்துவந்த மைத்திரிபால, விவசாயத்துறை அமைச்சராக பதவி வகித்தார்.

அதன் பின்னர், விவசாயம் சம்பந்தப்பட்ட அரசாங்கத்தின் பல்வேறு அமைப்புகளுக்கு தலைமை தாங்கிய இவர், 4 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் படி, சுகாதார அமைச்சராக பதவி ஏற்றார்.

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் உச்சக்கட்டத்தைத் தொட்டிருந்த காலத்தில் 2008 ஆம் ஆண்டில் கொழும்பின் புறநகர்ப் பகுதியான பிலியந்தலையில் மைத்திரிபால சிறிசேன தற்கொலை குண்டுத் தாக்குதல் முயற்சி ஒன்றில் இருந்து உயிர் தப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள, ஜனாதிபதித் தேர்தலில், எதிரணிகள் சேர்ந்து பொது வேட்பாளராக தன்னை தெரிவு செய்துள்ளதாக, நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

# உயிரோடு இருக்கும் வரை மகிந்தவுக்கே ஆதரவு



(கொழும்பு)

எமது நாட்டின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உயிரோடு இருக்கும் வரை அவருக்கு வாக்களிக்கவும் அவருக்கு விசுவாசமாக இருக்கவும் எமது சமூகம் கடமைப்பட்டுள்ளது. என்று தேசிய காங்கிரஸின் தலைவரும் உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியாகியுள்ளது. கட்சி தாவும் படலமும் ஆரம்பமாகியுள்ளது. அரசியல் தலைமைகள் என்ன செய்வதெனத் தெரியாமல் தடுமாறிக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் தேசிய காங்கிரஸின் தலைமை தீர்க்க தரிசனமான முறையில் சிந்தித்து முடிவெடுத்துள்ளது.

மூன்றாவது தடவையும் இந்த நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுதியும், ஆளுமையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே உள்ளன. அவரே மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவார்.

இந்த வெற்றியில் இந்த நாட்டிலுள்ள சகல சிறுபான்மைச் சமூகங்களும் கைகோர்த்து ஒன்றிணைய வேண்டும். பின்னர் கைசேதப்படுபவர்களாக மாறிவிடக்கூடாது என நான் பகிரங்கமாக தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

# ஆவரங்கால் வங்கி வீதி புனரமைப்பு எப்போது?

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் வங்கி வீதி பல வருடங்களாக திருத்தப்படாமையால் அப்பகுதி மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

இவ் வீதி மந்திரிமலைவரை திருத்தப்படாது இருப்பதால் வீதியில் புற்கள் பெருமளவில் வளர்ந்து வீதியால் பயணிப் போரும் வாகனங்களில் செல்வோரும் பெரும் கஷ்டத்தின் மத்தியில் பிரயாணம் செய்வதை அவதானிக்க முடிகிறது.

இவ் வீதி இராசபாதைக்கு செல்லும் ஒரு பிரதான பாதையுமாகும். மேலும் விவசாயிகள் தங்கள் விவசாய தேவைகளுக்கு பயன்படுத்தும் முக்கிய வீதியாகவும் இது இருப்பதால் இவ் வீதியை உடன் திருத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (08)

# மின்சாரம் வழங்கல்

வடவரணி சைவப்பிரகாச கௌரி பாலன் முன்பள்ளிக்கு கடந்த வாரம் மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மின்வசதி இல்லாததால் சிறுவர்களின் கலை நிகழ்வுகளை நடாத்துவதில் முன பள்ளிச்சமூகம் பெரும் இடையூறுகளை எதிர்கொண்ட தோடு ஒலி பெருக்கி பாவனைக்கு மின் உபகரணங்களை வாடகைக்கு எடுத்தே பயன்படுத்தி வந்தனர். தற்போது மின்வசதி ஏற்படுத்தப் பட்டதால் தாம் பெரும்பயன் அடைந்துள்ளதாக முன்பள்ளி சமூகத்தினர் மகிழ்ச்சி தெரிவித்தனர். (150)

# முரசின் இன்றைய பலன்



(23.11.2014 ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் கார்த்திகை மாதம் 07 ஆம் திகதி.
மரணயோகம் / பிரதமை.
அனு நட்சத்திரம் பிற்பகல் 02.02 வரை. பின் கேட்டை.
இராகு காலம 04.41 - 06.11 வரை. சுபநேரம 09.11 - 10.41 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வெளியூர் பயணம் ஏற்படும், அரசாங்க வேலை கைகூடும், பதிவின்மையால் பிறப்புச்சான்றிதழ் பெற முடியாது அவஸ்தைப்படல். |
| ரிஷபம் | யாரோ ஒருவரின் உதவியை நம்பமுடியாது ஆச்சரியப் படல், முதிர் கன்னியை நினைத்து கவலை கொள்ளல். |
| மிதுனம் | பிறரின் குறைகளைப் பெரிது படுத்தாது வாழப்பழகுதல், நியாயத்தை எடுத்துக் கூறி சுமுகநிலையை ஏற்படுத்தல். |
| கடகம் | விற்பனை விலைக்குறைவினை ஏற்படுத்தல். வளர்ச்சிக்காக உதவ முன்வருதல். |
| சிம்மம் | தேவையற்ற பிரச்சினையால் அமைதியை இழத்தல், முரண்பாடுகளை தவிர்த்தல் நன்று. |
| கன்னி | சீட்டுப்பிடிக்கும் யோசனையில் தடங்கல் ஏற்படல், நம்பிக் கையில் பெற்ற பணத்தில் சிக்கல் ஏற்படல். |
| துலாம் | தொழிலில் தனித்தியங்க முடிவெடுத்தல், நினைத்த காரியம் முடிவடைதல். |
| விருச்சிகம் | விற்பனைவிலை காட்சிப்படுத்தாமையினால் எச் சரிக்கை செய்யப்படல், தேகசுகம் பாதிக்கப்படல், சுவீப் அதிஷ்டமுண்டாகும். |
| தனுசு | பூஜைகளில் கலந்து கொண்டு தெய்வ அருள்வேண்ட முயலுவீர்கள், திருமணப்பொருத்த நிர்ணயம் கச்சிதமாக அமையலாம். |
| மகரம் | வாகனத்தை செலுத்த முன் ஆவணங்களைச்சரிபார்க் கவும், புதியன கொள்வனவு செய்ய விரும்புதல். |
| கும்பம் | மிகவும் கவனமாக தொடர்பாடலை ஏற்படுத்துங்கள், தொழில் முன்னேற்றமடைய ஆலோசனைகளை கேட்டறிதல். |
| மீனம் | வெளியூர் மணமகனைக் கரம் பிடிக்கும் யோகமுண்டாதல், நோய் குணமடைய ஆயுர் வேதவைத்தியத்தை நாடமுனைதல். |

# குடிப்பதற்கு சுத்தமான நீர்வேண்டும்

# சுன்னாகம் மக்கள் அவசர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதி மக்கள் தமக்கு குடிப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கும் சுத்தமான நீர் வழங்கப்படவேண்டும் என்று அரச அதிகாரிகளிடம் கோரியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர்கள் இவ்வாறு கோரியுள்ளனர்.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தின் எண்ணெய்க் கழிவினால் இப்பகுதி கிணறுகளில் எண்ணெய் உறைந்த நிலையில் நீர் காணப்படுகிறது. அந்த அசுத்தமடைந்த நீரை தாம் பருகிவருவதாகவும் இதனால் தாம் உளவியல் ரீதியாகப் பாதிக கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவாகள் தாம் பயன்படுத்துவதற்கு சுத்தமான நீர் விநியோகிக் கப்பட வேண்டும் இதற்கென விசாரனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கவென நியமிக்கப்பட்ட எட்டுப்பேர் கொண்ட விசாரணைக் குழு என்ன செய்கின்றது என்பதனை சம்மந்தப்பட்ட தரப்பினர் வெளிப்படுத்தவேண்டும். இந்த விடயம் பெரும்பகுதி மக்களுக்கு இன்னமும் தெரியாதநிலை உள்ளது எனக்குறிப்பிட்டனர்.

மேலும் பாதிக்கப்பட்ட கிணறுகளில் நீர் பெறுவதனைத்தடை செய்யும் அறிவிப்புப்பலகையை தொங்கவிட வேண்டும் என்று தெரிவித்த சுன்னாகப் பகுதி மக்கள் தேசிய நீர்வழங்கல் வடிகால அமைப்பு சபையினால் இந்த நீர் பரிசோதிக்கப்பட்டு கந்தரோடை போன்ற பகுதிகளுக்கு விநியோகிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆனால் சுன்னாகம் பகுதி மக்களுக்கு இதுகுறித்து அறிவிக்கப்படவில்லை. பிரதேச சபையாக இருந்தாலும் பிரதேச செயலாகமாக இருந்தாலும் அல்லது சுகாதாரத்திணைக்களமாக இருந்தாலும் இது குறித்து பொது மக்களுக்கு அறிவிக்கவில்லை. 2012 ஆம் ஆண்டு ஆறு கிணறுகளில் செய்யப்பட்ட பரிசோதனையின் பின்னர் சுன்னாகம் கிணற்றில் இருந்து விநியோகிக்கப்பட்ட நீர் தடை செய்யப்பட்டது.

2012 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் உடுவில் பிரதேச செயலர் இவ்விடயத்தைப்பற்றி கேள்வி எழுப்பிய போது, சூழல் பாதுகாப்பு அதிகார சபையினர் இந்த நீரில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்துள்ளனர். அவாகள் ஏன் இவ்வாறு பதில் வழங்கினார்கள் என்பது தெரியவில்லை. இதன் பின்னர் பிரதேச சபையிலும் கூட்டம் நடைபெற்று அறிக்கையும் தயாரிக்கப்பட்டது. அதற்கும் என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது.

மேலும் கிணறுகளின் நீரைப் பரிசோதிப்பதற்கு இரசாயனப் பொருள் இல்லை என்று கூறப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் அவை பெறப்பட்டுள்ள போதும் இன்னமும் கிணறுகள் பரிசோதிக்கப் படவில்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த ஊடகவியளாலர் சந்திப்பில் ரி.சண்முகநாதன், வளர்மதி, சர்வேஸ்வரக் குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(பா)





சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலையின் மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பாடசாலை முதல்வர் ப.சுதர்சன் மாணவனுக்கு சின்னம் சூட்டுவதையும் காணலாம். (137)

# 'குரும்பை' குறுப்பட வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் வெளியீடாக வெளிவரும் பீ.சேகலிஸ் இயக்கத்தில் உருவான 'குரும்பை' என்னும் குறும்படத்தின் வெளியீட்டு விழா இன்று மாலை 04.30 மணிக்கு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஐக்கிய நாடுகள் வாழ்வக நிறுவனத்தின் பிரதித் திட்ட மேலாளர் சைவப்புலவர் கந்தையா பத்மானந்தன் சிறப்பு விருந்தினராக யாழ்.மறை மாவட்ட சமூகத்தொடர்புகள் ஆணையகத்தின் இயக்குநர் அருட்பணி. ஜே.சி. போல் றொஹான் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

குரும்பை குறும்படத்திற்கான மதிப்பீட்டுரையை மூத்த எழுத்தாளரும் விமர்சகருமான அ.யேசுராசா வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாய்களுக்கு விசர்நாய் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுப்பு

நாய்களுக்கு விசர்நாய் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சங்கானை சுகாதார வைத்தியதிகாரி பணிமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விசர்நாய் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் இதுவரை 450 இற்கும் மேற்பட்ட நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பை வழங்கி, தங்களுடைய வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய் தடுப்பூசி ஏற்றும்படி சுகாதார வைத்தியதிகாரி பணிமனையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதற்கமைய வலி.மேற்கு (சங்கானை) பிரதேச சபையுடன் இணைந்து சுகாதார வைத்தியதிகாரி பணிமனை இந்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் அராலி பிரதேசத்திலேயே அதிகளவான நாய்களுக்கு விசர்நாய் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன.

இதேவேளை, தெல்லிப்பளை பகுதியில் நான்கு பேரை கடித்த நாய்க்கு விசர்நோய் தொற்று உள்ளமை கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும இவர்களுக்கு விசர்நாய் கடிக்கான சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெல்லிப்பளை சுகாதார வைத்தியதிகாரி ப.நந்தகுமார் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

# மைலோ கிண்ணத்திற்கான இறுதி யுத்தம் இன்று

## நாவாந்துறை சென். மேரிஸ், நவிண்டில் கலைமதி பலப்பரீட்சை



நவிண்டில் கலைமதி


நாவாந்துறை சென். மேரிஸ்

(யாழ்ப்பாணம்)

மைலோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் இன்றைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் நவிண்டில் கலைமதி அணியும் பலப்பரீட்சை நடாத்தவுள்ளன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவு ஏற்பாடு செய்த மைலோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றன.

இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியனான நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் உடுப்பிட்டி கலைமதி அணியும் மோதின. முதல் பாதி ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியின் நட்சத்திர வீரர் யூட் முதல் கோலை அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து ஜெனட் 28ஆவது நிமிடத்தில் மற்றுமொரு கோலைப் போட்டு அணியின் ஸ்திரத் தன்மையை அதிகரித்தார். இதற்குப் பதில் கோல் அடிக்கும் முனைப்புடன் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி செயற்பட்ட போதிலும் அதன் முயற்சிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டன. இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை சென். மேரிஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

பிற்பாதி ஆட்டத்திலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சென். மேரிஸ் அணி 48ஆவது நிமிடத்தில் மேலுமொரு கோலைப் போட்டு வெற்றியை உறுதி செய்தது. இந்த கோலை அதன் நட்சத்திர வீரர் யூட் பெற்றுக் கொடுத்தார். நிறைவில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று நடப்புச் சம்பியன் என்ற மகுடத்திற்கு வலுச்சேர்த்துள்ளது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் குருநகர் பாடுமீன் அணியும் நவிண்டில் கலைமதி அணியும் மோதின. மைதானம் இரசிகர்களால் சூழப்பட்டிருந்த நிலையில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முற்பாதி ஆட்டத்தில் மோதிக் கொண்டன. முற்பாதி ஆட்டத்தின்போது இரு அணிகளுக்கும் கோலடிக்கும் வாய்ப்புகள் மிக இலகுவாக இருந்தன. அந்த வாய்ப்புக்களை இரு அணிகளும் கோட்டைவிட்ட நிலையில் முற்பாதி ஆட்டம் கோல் எதுவும் பெறப்படாத நிலையில் நிறைவுற்றது.

பிற்பாதி ஆட்டத்தில் பாடுமீன் அணி சிறப்பாக ஆடியதுடன் கலைமதி அணியின் கோல் பரப்பை ஆக்கிரமித்திருந்தது. 31ஆவது நிமிடத்தில் கலைமதி அணியின் வீரர் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதன் பின்னர் ஆக்ரோஷம் கொண்டு செயற்பட்ட கலைமதி அணியின் ரஜினிகாந்த 37ஆவது நிமிடத்தில் சிறப்பானதொரு கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். பத்துப் பேருடன் சளைக்காது போராடிய கலைமதி தொடர்ந்தும் கோல் அடிக்கும் முயற்சியை மேற்கொண்டதுடன் பாடுமீன் அணியின் நகர்வுகளையும் கட்டுப்பபடுத்தியது. மறு-புறம் பாடுமீன் அணி கோல் கணக்கை சமப்படுத்தும் முனைப்புடன் இறுதி வரை செயற்பட்டபோதிலும் அதன் முயற்சிகள் அதிர்ஷ்டமின்மை காரணமாக கை-நழுவிப் போயின. நிறைவில் நவிண்டில் கலைமதி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதேவேளை, இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் இன்றைய தினம் நடைபெறவுள்ளன. இதில் காலை 10.00 மணிக்கு மூன்றாமிடத்திற்கான போட்டியில் குருநகர் பாடுமீன் அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதவுள்ள அதேவேளை, பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும் இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் நவிண்டில் கலைமதி அணியும் மோதவுள்ளன. (எஸ்.பி., 93,48)

# கிண்ணத்தை வெல்வோம் இறுதி வரை போராடும்


சென். மேரிஸ் கப்டன்





கலைமதி கப்டன்

(யாழ்ப்பாணம்)

நடப்புச் சம்பியன் என்பதால் எங்கள் அணி மீது அதிக எதிர்பார்ப்பு இருக்கும். அதற்கு ஏற்ற வகையில் செயற்பட்டு கிண்ணத்தை வெல்வோம் என நாவாந்துறை சென். மேரிஸ் அணியின் கப்டன் ஜெக்சன் தெரிவித்துள்ளார்.

மைலோ கிண்ணக் கால்பந்து போட்டித் தொடரின் இன்றைய தினம் நடைபெறவுள்ள இறுதி ஆட்டம் குறித்து கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மைலோ கிண்ணக் கால்பந்துத் தொடரில் ஆர்வமாக நாங்கள் பங்குபற்றியிருந்தோம். அத்துடன் முதல் சுற்றுப் போட்டியிலேயே கிண்ணத்தையும் நாம் கைப்பற்றியிருந்தோம். அதேபோன்று இந்த ஆண்டும் இறுதிப் போட்டிக்கு நாம் முன்னேறியிருப்பதில் மகிழ்ச்சி. நடப்புச் சம்பியன் என்ற நாமம் எமக்கு இருப்பதால் எங்கள் அணி மீதான எதிர்பார்ப்பு அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது கிண்ணத்தை மீண்டும் கைப்பற்றுவோம் என்ற அப்பிராயம் எமது இரசிகர்கள் மத்தியில் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. இரசிகர்கள் விருப்பை ஈடுசெய்யும் வகையில் எமது செயற்பாடுகள் களத்தில் இருக்கும்.

சிறந்த அணியைக் கொண்டிருக்கும் நாங்கள் இந்த ஆண்டும் மைலோ கிண்ணத்தை வெல்ல இறுதி வரை முயற்சிப்போம். அத்துடன் இவ்வாறானதொரு தொடரை நடாத்த அனுரணை வழங்கும் மைலோ நிறுவனத்தினருக்கு எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(எஸ்.பி., 93)

எங்கள் பலத்தை ஒருங்கிணைத்து இறுதிப் போட்டியில் கிண்ணத்தை வெல்ல உறுதியுடன் போராடுவோம் என நவிண்டில் கலைமதி அணியின் கப்டன் சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

மைலோ கிண்ணக் கால்பந்து போட்டித் தொடரின் இன்றைய தினம் நடைபெறவுள்ள இறுதி ஆட்டம் குறித்து கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படும் மிகப் பெரிய தொடர் ஒன்றில் நாங்கள் இறுதிப் போட்டியில் மோதவிருப்பது எங்கள் அணியின் வளர்ச்சியையே காட்டுகின்றது. இது வீரர்களின் அர்ப்பணிப்புக்குக் கிடைத்த சிறந்த பரிசாகவே கருதுகிறேன். இச்சுற்றுப் போட்டியை ஒழுங்கமைத்த நெஸ்லே லங்கா நிறுவனத்தினருக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நாவாந்துறை சென். மேரிஸ் அணி கடந்த ஆண்டு கிண்ணத்தை வென்றிருக்கின்றது. அந்த அணியில் சிறந்த வீரர்கள் இருப்பதை நாங்கள் மதிக்கின்றோம். அது போன்று எமது அணியிலும் அந்த அணிக்கு நிகரான வீரர்கள் இருந்தமை காரணமாகவே இத்தொடரின் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருக்கின்றோம். இறுதிப் போட்டியிலும் எங்கள் சிறப்பான ஆட்டம் தொடரும். கால்பந்துப் போட்டியைப் பொறுத்த வரை ஒருங்கிணைந்து செயற்படுவதுதான் முக்கியம். எங்கள் அணியின் பலமே ஒருங்கிணைந்து செயற்படுவதில் உள்ளது. சிறந்த வீரர்களைக் கொண்டுள்ள நாம் எதிரணிக்கு சவால் அளிக்கும் வகையிலும், எமது அணியின் இரசிகர்களைத் திருப்திப்படுத்தும் வகையிலும் செயற்படுவோம். அதன் மூலம் போட்டியை எமக்கு சாதகமாக்கி வெற்றியைப் பதிவு செய்ய இறுதி வரை எமது அணி போராடும் எனத் தெரிவித்துள்ளார். (எஸ்.பி., 93)

# ஆஸியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவோம்

அவுஸ்ரேலிய அணியை அவர்களது சொந்த மண்ணில் வீழ்த்த முடியும் என்று இந்திய அணியின் தற்காலிக கப்டன் ஹோலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எங்களது டெஸ்ட் அணி வீரர்களின் திறமை மீதும், மனோதிடம் மீதும் நாங்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளோம். ஒவ்வொரு வீரர்களும் அவுஸ்ரேலியாவில் உள்ள சவாலை எதிர்கொள்ள ஆர்வமாக இருக்கிறார்கள். அங்குள்ள போட்டிகளில் ஆக்ரோஷத்துடன் எச்சரிக்கையாக ஆட வேண்டியது அவசியம். முதலில் எம்மால் சமாளிக்க முடியும் என்ற மனநிலை இருக்க வேண்டும். அதன் பின் ஆக்ரோஷ பாணியை வெளிப்படுத்தி, ஆட்டத்தை எம் வசப்படுத்த வேண்டும். இந்த மாதிரியான மனநிலையை உருவாக்கிக் கொள்வது தான் போட்டியின் பிரதான யுக்தி.

டெஸ்ட் தொடரில் களம் காணும் 11 பேர் கொண்ட அணியில் சரியான வீரர்களை அடையாளம் கண்டு பயன்படுத்த வேண்டும். ஏனெனில் டெஸ்ட் போட்டியில் எப்போதும் சரியான கூட்டணியை களம் இறக்கி, அவர்களுக்கு நம்பிக்கை அளிக்க வேண்டியது முக்கியம்.

எல்லா நேரமும் வெற்றி மட்டுமே மனதில் இலக்காக இருக்க வேண்டும். அவுஸ்ரேலியாவை அதன் சொந்த மண்ணிலேயே தோற்கடிக்க எங்களுக்கு நல்ல வாய்ப்புள்ளது. இதற்கு முன்பு நாங்கள் அவர்களை அவர்களது இடத்தில் வீழ்த்தியிருப்பதை மறந்து விடக்கூடாது. அதே போன்று ஏன் மீண்டும் அவர்களை தோற்கடிக்க முடியாது? அணியில் உள்ள எல்லா வீரர்களுக்கும் ஆக்ரோஷமாக ஆடக்கூடிய பாங்கு உண்டு.

விரைவில் உலகக் கோப்பை போட்டி வர இருந்தாலும், முதலில் எங்களது கவனம் டெஸ்ட் தொடரில் மட்டுமே இருக்கும். அதன் பின் முத்தரப்பு கிரிக்கெட் தொடர் முடிந்த பின்பே உலகக் கோப்பை குறித்து சிந்திப்போம். அவுஸ்ரேலியாவில் உலகக் கோப்பை போட்டி நடக்கவுள்ள நிலையில், அதற்கு முன்பாக அவ்விடத்திலேயே விளையாட வாய்ப்பு கிடைத்தது நாங்கள் செய்த பாக்கியம். உலகக் கோப்பைக்கு முன்பாக அங்குள்ள சூழலை பழகிக் கொள்வதற்கு இந்த தொடர் உதவும்.

தற்போது முதலாவது டெஸ்டில் கப்டனாக பணியாற்ற வாய்ப்பு கிடைத்திருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. எனது கனவு நனவானது போன்று உள்ளது. டெஸ்ட் தொடரை நாங்கள் நல்ல முறையில் தொடங்குவோம் என்று நம்புகிறேன்.

எங்களது முழுக் கவனமும் கிரிக்கெட் மீதே இருக்கிறது. களத்திற்கு வெளியே (ஐ.பி.எல். சூதாட்ட பிரச்சினை) நடக்கும் விடயங்களைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. அது தொடர்பாக எதுவும் விளக்கம் தேவை என்றால், அதை அணி நிர்வாகம் பார்த்துக் கொள்ளும். மற்ற விவகாரங்களால் கவனம் சிதறவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இந்தியா-அவுஸ்ரேலியா மோதும் முதலாவது டெஸ்ட் எதிர்வரும் 4ஆம் திகதி பிரிஸ்பேனில் ஆரம்பமாகவுள்ளது. விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக முதலாவது டெஸ்டில் மட்டும் இந்திய கப்டன் டோனி ஆடமாட்டார். அதற்கு பதிலாக ஹோலி அந்த டெஸ்டில் இந்திய அணியின் கப்டனாக செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# ஷாகிப் அல் ஹசன் கலக்கல்

## பங்களாதேஷ் அபார வெற்றி

(சிட்டாகொங்)

சிம்பாப்வே அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் பங்களாதேஷ் அணி 87 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் நேற்று முன்தினம் சிட்டாகொங்கில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி ஷாகிப் அல் ஹசனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் பங்களாதேஷ் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஷாகிப் அல் ஹசன் 99 பந்துகளை எதிர்கொண்டு பத்து பவுண்டரிகள் அடங்கலாக 101, கப்டன் ரஹீம் 65, சபீர் ரஹ்மான் ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 282 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே அணி பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாது திறணியதுடன் விக்கெட்டுக்களையும் வேகமாகப் பறிகொடுத்தது. இறுதியில் சிம்பாப்வே அணி 42.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 194 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் மசகட்சா 42, ரெய்லர் 54 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஷாகிப் அல் ஹசன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் பங்களாதேஷ் அணி 87 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக பந்துவீச்சு, துடுப்பாட்டத்தில் கலக்கிய ஷாகிப் அல் ஹசன் தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி இன்று சிட்டாகொங்கில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆட்டநாயகன் விருது வென்ற ஷாகிப் அல் ஹசன் கருத்துத் தெரிவிக்கையில், அணியின் வெற்றிக்காக எனது முழுப் பங்களிப்பையும் வெளிப்படுத்தியிருப்பது மகிழ்ச்சி. இது போன்று தொடர்ந்து செயற்பட்டு எனது திறனை மேம்படுத்திக் கொள்வேன். விரைவில் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளதால் அதற்கு சிறந்த பயிற்சிக் களமாக இத்தொடரைப் பயன்படுத்திக் கொள்வோம். உலகக் கிண்ணத் தொடரில் எங்களால் முயன்ற வரை போராடி முதன்மைச் சுற்றுக்கு முன்னேற முயற்சிப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

# இரண்டாவது டெஸ்ட் சமநிலை



(டுபாய்)

பாகிஸ்தான்- நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

இப்போட்டி டுபாயில் நேற்று முன்தினம் நிறைவடைந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி 403 ஓட்டங்களையும், பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸில் 393 ஓட்டங்களையும் பெற்றிருந்தது.

10 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி ரெய்லரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் நியூசிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் ரெய்லர் 104, மக்கலம் 45 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஷாகா ஐந்து, பாபர் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 261 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய பாகிஸ்தான் அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போட்டி நிறைவுக்கு வந்தது. இதில் மசூட் 40, அசார் அலி 24, யுனிஸ்கான் 44 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பௌல்ட் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் இப்போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக ரெய்லர் தெரிவு செய்யப்பட்டார். முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிக்கின்றது. இரு அணிகளுக்குமிடையிலான இறுதி டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி சார்ஜாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெற்காசிய கால்பந்து; இந்தியா சம்பியன்



(இஸ்லாமாபாத்)

பெண்களுக்கான தெற்காசிய கால்பந்து தொடரில், இந்திய அணி தொடர்ந்து மூன்றாவது முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி அசத்தியது. நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில், நேபாளத்தை மிகச் சுலபமாக வீழ்த்தியது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் பெண்களுக்கான 3ஆவது தெற்காசிய கால்பந்து சம்பியன்ஷிப் தொடர் நடைபெற்றது. இதில் நடப்பு சம்பியன் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இந்தியா, நேபாளம் அணிகள் தொடர்ந்து மூன்றாவது முறையாக மோதின. இதில் அபாரமாக ஆடிய இந்திய அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்தியா சார்பில் பாலாதேவி 4, கமலாதேவி, பிரமேஷ்வரி தேவி தலா ஒரு கோல் அடித்தனர். இதன்மூலம் இந்திய அணி இத்தொடரில் ஹட்ரிக் சம்பியன் பட்டம் வென்றது. முன்னதாக 2010, 2012இல் நடந்த இறுதிப் போட்டிகளில் இந்திய அணி, நேபாளத்தை வீழ்த்தி கோப்பை வென்றது.

## விளையாட்டு செய்திகள்

# போத்துக்கல் வெற்றி

(மான்செஸ்டர்)

ஆர்ஜென்ரீன அணிக்கு எதிரான நட்பு கால்பந்து போட்டியில் போர்த்துக்கல் அணி 1-0 என வெற்றி பெற்றது.

இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டரில் ஆர்ஜென்ரீனா, போர்த்துக்கல் அணிகள் மோதிய சர்வதேச நட்பு கால்பந்து போட்டி நடைபெற்றது. முதல் பாதியில் இரு அணி வீரர்களின் கோல் அடிக்கும் முயற்சி பலன் தரவில்லை. இரண்டாவது பாதியிலும் நட்சத்திர வீரர்களான மெஸ்சி (ஆர்ஜென்ரீனா), ரொனால்டோ (போர்த்துக்கல்) கைகொடுக்க தவறினர். போர்த்துக்கல் அணியின் ரேபில் குயேரோ ஸ்டாப்பேஜ் நேரத்தில் (90ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து அசத்தினார். முடிவில், போர்த்துக்கல் அணி 1-0 என வெற்றி பெற்றது.

# சீமானின் பொறுப்பற்ற பேச்சுகளை நாமனைவரும் கண்டனம் செய்யவேண்டும்



- எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.

அண்மையில் இந்தியாவுக்கு சென்று வந்த வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அங்கு தெரிவித்த அரசியல் கருத்துக்கள் பல விடயங்களில் முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்பாக அவர் தமிழகத்திலுள்ள ஈழ ஆதரவாளர்களின் செயற்பாடு களையிட்டு தெரிவித்த அதிருப்தி யானது நாம்தமிழர் கட்சி சீமான் போன்றோரை கோபப்படுத்தியுள்ளது.

முதலமைச்சர் பேட்டிகொடுத்த அதே தந்தி தொலைக்காட்சியில் சீமானும் முதலமைச்சர் விக்னேஸ் வரனுக்கு எதிராக காரசாரமான தாக்குதல்களை தொடுத்துள்ளார்.

"இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக 60 வருடங் களாக போராட்டம் நடந்து வருகின்றது. இதில் எதிலாவது இவருக்கு பங்கு உண்டா? அரசி யல் போராட்டமாக இருக்கட்டும் இல்லை ஆயுதப் போராட்டமாக இருக்கட்டும். அப்போது எங்கே போய் இருந்தார் விக்னேஸ்வரன்?... இறுதிக் கட்டப் போரில் கூட எந்தவிதமான நன்மைகளும் தமிழ் மக்களுக்குச் செய்யவில்லை. ஒரு கடிதம் கூட வெளிநாடுகளுக்கு இவர் எழுதவில்லை. இவருக்கு எப்படித் தெரியும் போராட்டம் என்றால் என்ன என்று?... ஜயாவிற்கு தெரிந்தது கோவில் வாசலும் நீதிமன்ற வாசலும்தான் வேறு ஒன்றும் இவருக்குத் தெரியாது."

இது ஒருவகையில் அவரது கடந்த காலங்கள் மீதான விமர்சன மாக கூட இருக்கலாம். ஆனால் இவற்றை வைத்துக்கொண்டு அவர் தெரிவித்துள்ள கருத்துக்களை எந்தவகையில் சீமான் போன்றோர் நிராகரிக்க முடியும்?

விக்னேஸ்வரன் அரசியலுக்கு வரும்வரை இலங்கையரசின் நீதித்துறையில் பணியாற்றியவர் என்பது பொய்யானதல்ல. ஆனால் தேர்தலின் போது வடக்கு மக்கள் அவருக்கு ஆணை வழங்கியிருக்கின்றார்கள். வடக்கு மாகாணத்தில் போட்டியிட்ட அனைவரையும் விட மிக அதிக படியான வாக்குகளை அளித்து மக்கள் அவரை முதலமைச்சர் ஆக்கியுள்ளனர் என்பதை மறந்துவிடக் கூடாது.

அவரது கருத்து தமிழ்மக்களின் கருத்தல்ல. தான் சொல்வதே இலங்கைத் தமிழர்களின் கருத்து என்று சொல்ல சீமானுக்கு என்ன துணிச்சல்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிழையான தெரிவாகக் கூட இருக்கலாம். ஆனால் அவர் இன்று வட மாகாண மக்களின் இறைமை பாராதீனப்படுத்தப்பட்ட ஒரு முதலமைச்சர். கூலிக்கு மாரடிக்கும் சீமான் போன்றவர்கள் அவருக்கு முன்னேநிற்கும் தகுதிகூட பெற்றவர்களல்ல. வெளிநாடுகளில் புலி நிதியை இன்றும் கையாடிக் கொண்டிருக்கிறவர்கள் மாதாந்தம் தருகின்ற பணத்துக்கு கூலிக்கு மாரடிக்கும் சீமான் தரவளிகளுக்கு இலங்கைத் தமிழர்களில் என்ன அக்கறை இருக்க முடியும்?

சொந்த நாட்டில் அரசியல் செய்கின்றவர் ஆயிரம் விமர் சனங்கள் இருந்தபோதும் அன்றிலிருந்து இன்றுவரை மக்களின் நம்பிக்கையை பெற்று முன்னணியில் திகழ்கின்ற ஒரு கட்சியின் தலைவர்களில் ஒருவர். எமது மக்கள் பற்றி கருத்து சொல்ல அவருக்கு இல்லாத உரிமையை இந்த சீமானுக்கு யார் வழங்கியது? எத்தனை காலத்துக்குத்தான் எமக்கு இந்த தமிழ் நாட்டு பிழைப்புவாதிகள் அரசியல் வழிகாட்டியாக இருக்க அனுமதிக்கப் போகின்றோம்?

எமது முதலமைச்சர் மீதான சீமானின் பொறுப்பற்ற பேச்சுகளை அனைத்து அரசியல் வேறுபாடு களையும் தாண்டி நாமனைவரும் கண்டனம் செய்யவேண்டும். நமது விடுதலையை வென்று தர இந்த கோடம்பாக்கத்து கோமாளிகளிடம் ஈழத்தமிழர் பிரச்சினைகளை அடகுவைத்தவர்கள் யார்? இந்த தொப்புள்கொடி உறவு மாயை களில் மயங்கி நாம் இன்னுமின்னும் எமது இலங்கையரென்னும் வாழ்வுரிமையை பலவீனப்படுத்திக் கொண்டிருக்க முடியாது. நாம் தொப்புள்கொடி உறவு பற்றி பெருமைபேசிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு கணமும் அது ஈழத்தமிழரை வந்தேறுகுடிகள்

என்று சிங்கள தேசியவாதிகள் சொல்லுவதை ஆமோதிப்பதாகவே அமையும். எனவே இந்த தமிழ்நாட்டு சீமான் போன்ற போக் கற்றவர்களால் தான் யாதுமாகும் என்று பிரசாரம் செய்வதை எமது ஊடகங்கள் முதலில் நிறுத்திக் கொள்ள முன்வரவேண்டும்.

உண்மையிலேயே முதல மைச்சர் விக்னேஸ்வரன் தமிழ் நாட்டு ஈழ ஆதரவாளர்களையிட்டு மிக சரியான கணிப்பீட்டை வைத் திருக்கின்றார். முன்பும் ஒருதடவை தமிழ் நாட்டு ஈழ ஆதரவாளர்கள் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும் என்று சொன்னவர் அவர். இவற்றை மட்டுமல்ல "நாம் தமிழீழ கோரிக்கையை கைவிட்டுவிட்டோம்" என்றும் "குறைந்தபட்ச அதிகாரங்களை கொண்டிருந்த போதும் மாகாண சபைகளை ஏற்றுக்கொண்டு அரசியல் செய்கின்றோம்" என்றும் "டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் கூட தமது இணக்க அரசியல் வழிகளில் தமிழ் மக்களுக்கான பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கின்றார்கள்" என்றும் முதலமைச்சர் சொன்ன யதார்த்தமான கருத்துக்கள் சீமானை நிச்சயம் கடுப்பேற்றி யேயிருக்கும்.

காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம்பெறும் தலைவர்கள் எவரிடமும் ஒருமித்த அரசியல் கருத்து கிடையாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் வங்குரோத்துத்தனம் காரணமாக தமிழ் மக்களுக்கான தீர்வு பற்றிய ஒரு சரியான கொள்கை கோட்பாடு ஏதுமல்லு ஒவ்வொருவரும் தத்தமக்கு வாயில் வந்தபடியெல்லாம் கொள்கை விளக்கங்களை அளித்து வருகின்றார்கள். வெளிநாடுகளுக்கு செல்லும் போதெல்லாம் புகலிட தமிழர்களின் தமிழீழ கனவுக்கு தீனி போடும் பேச்சுக்களை அள்ளிவீசுவதில் இன்னும் குறைவில்லை.

அண்மையில் வெளிநாடுகளுக்கு சென்றுவந்த தமிழரசு கட்சியின் புதிய தலைவர் மாவை சேனாதிராஜா அங்கெல்லாம் "தமது இறுதி இலக்கை அடையும் வரை போராட்டம் ஓயாது" என்றெல்லாம் முழங்கித் தள்ளியிருக்கின்றார். மாவையிடம் எது இறுதி இலக்கு என்று கேட்டால் என்ன பதில் இருக்கின்றது? தமிழீழமா? அப்படி என்றால் அதை அடைய என்ன நீண்ட கால திட்டம் இருக்கின்றது? கட்சிக்கென்று கொள்கை கோட்பாடு இருந்தால்தான் சிறிதரனோ சிவாஜிலிங்கமோ தான்தோன்றித்தனமாக கருத்து கூறுவது தவிர்க்கப்படும்.

இந்த நிலையில் உரிமையை வென்றெடுப்பதே எமது இலக்கு என்று அரியநேந்திரன், சிறிதரன், பிரேமச்சந்திரன் வகையறாக்கள் பொத்தாம் பொதுவான அறிக்கை மன்னர்களாக வரிசையில் நிற்கின்றார்கள். உரிமை மாகாண சபை மூலம் கிடையாதென்றவர்கள் இன்று அதை பொறுப்பெடுத்து வீணடிக்கின்றார்கள். மாகாண சபைகளை திறம்பட நாடாத்த போதிய அதிகாரம் இல்லை என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் நாடாளுமன்றில் நேற்றும்கூட பேசியிருக்கின்றார். அப்படி என்றால் எந்த வகை அதிகாரங் களை தமிழ் மக்கள் கோருகின் றார்கள் என்கின்ற ஒரு தீர்வு திட்டம்கூட இன்றுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஏன் முன்வைக்க முடியவில்லை?

# சேகுவேரா கொலை செய்யப்பட்ட புகைப்படம் 47 வருடங்களின் பின்...!



உலகம் முழுவதும் புரட்சிகர சக்திகளுக்கு உந்துதலாகத் திகழும் சேகுவேரா கொலை செய்யப்பட்ட பிறகு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

கியூபாவில் பிடல் காஸ்ட்ரோவுடன் இணைந்து புரட்சியில் ஈடுபட்ட சேகுவேரா ஆட்சி மாற்றத்திற்கு வித்திட்டார். இந்நிலை யில் கடந்த 1967ஆம் ஆண்டு பொலிவிய இராணுவத்தால் சேகுவேரா சுட்டுக் கொல்லப் பட்டார். அதன்பிறகு, அவரது உடல் இரகசிய இடத்தில் புதைக்கப்பட்டது. அப்போது புகைப் பட கலைஞர் ஒருவரால் எடுக்கப்பட்ட புகைப் படங்கள், பொலிவியாவில் மத போதகர் லூயிஸ் கார்டேரா என்பவரிடம் இருந்தன.

2012ஆம் ஆண்டில் அந்த மத போதகர் இறந்த போது, அவரது உடைமைகளை உறவினர்கள் சோதனையிட்டதில், சேகுவேரா வின் புகைப்படங்கள் இருந்தது தெரிய வந்தது. இதையடுத்து அந்த புகைப்படங் களை, அவரது உறவினரும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவருமான இமானுல் ஆர்டியா என்பவர் தனது நாட்டுக்கு எடுத்து வந்தார். தற்போது அந்தப் புகைப்படங்களை அவர் வெளியிட்டுள்ளார்.

அந்தப் புகைப்படங்களில், ஒரு படத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகும், கம்பீரத்துடன் சேகுவேராவின் முகம் இருப்பது போன்றும், மற்றொரு படத்தில் சேகுவேராவின் உடல் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருப்பதும் இருக்கின்றன.

சேகுவேரா கொல்லப்பட்ட பிறகு, ஏ.எஃ.ப்.பி செய்தி நிறுவனத்தின் புகைப்படக் கலைஞர் மார்க் ஹட்டனால் எடுக்கப்பட்ட புகைப்படமே சர்வதேச பத்திரிகைகளில் வெளியாகின. அதுதவிர, வேறு எந்தப் படமும் வெளியாகவில்லை. எனவே இந்த புகைப்படங்களை மதபோ தகர் கார்டேராவிடம் மார்க் ஹட்டனே கொடுத்திருக்கலாம் என இமானுல் தெரிவித்துள்ளார்.

# வில்லுப்பாட்டு உருவான கதை

வில்லுப்பாட்டு எப்படி உருவானது என்பதற்கு, ஒரு செவிவழி கதை உண்டு. பாண்டிய மன்னர் வில்லுடன் வேட்டைக்குப் போனார். காட்டில் வேட்டையாடினார். சில மிருகங்கள் உயிரைவிட்டன. மாலை நேரம் வந்ததும், மன்னர் மனதில் ஒரு கலக்கம். அமைச்சரிடம்,

"இந்த உயிர்களை இப்படி கொல்கிறோமே... நமக்கு சந்தோஷம் அவைகளுக்குத் துன்பம். மானைக் கொன்றபின், அதன் குட்டி என்ன தவியாகத் தவிக்கிறது பார்த்தீரா?" என்றார். அமைச்சரும்," ஆமாம் ... அது பாவம்தான்" என்றார்.

"சரி... இதற்கெல்லாம் பரிகாரம் உண்டா?"

"உண்டு ராஜா... இறைவன் மீது மனமுருகப்பாடி, பாவ மன்னிப்பு கோருங்கள். இசை ஒன்றுக்குத்தான் இறைவன் இசைவான்" என்றார் அமைச்சர்.

உடனே, காட்டிலேயே கச்சேரி நடத்த முடிவானது. ஆனால் பக்க வாத்தியங்கள் இல்லை.

அமைச்சர், "சமயோசிதமாக நாம் உண்டாக்குவதுதான் கருவி" என்று கூற, வில்லையே காலுக்கிடையில் வைத்து, அம்பால் தட்டித் தட்டிப் பாடலானார், மன்னர். அப்படித் தட்டும் போது, வில் சரிவர நிற்காததால், ஓரத்தில் காட்டிற்குக் கொண்டு போயிருந்த மண்குடத்தைக் கட்டி நிறுத்திவிட்டுத் தட்டினர். "டும், டும்" என்ற நாதம் பிறந்துவிட்டது.

ராஜா பாடத்துவங்கும் முன், "தந்தனத்தோம்" என்று அடியெடுத்துக் கொடுத்தார் அமைச்சர். மன்னர் பாடும்போது, ஆமோதிக்க வேண்டாமா?

அதனால், மன்னரின் பரிவாரங்கள், "ஆமாம்" போட ஆரம்பித்தனர்.

அந்த வழக்கம் வில்லுப் பாட்டில் இன்றும் தொடர்கிறது.

- சுப்பு ஆறுமுகம் ஒரு பேட்டியில்...



முதலமைச்சர் ஆக்கியுள்ளனர் என்பதை மறந்துவிடக் கூடாது.

ஒவ்வொரு கணமும் அது ... வந்தேறுகுடிகள்

கொள்கை கோட்பாடு ஏதுமின்றி ஒவ்வொருவரும் தத்தமக்கு வாயில் வந்தபடியெல்லாம்

திட்டம்கூட இன்றுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஏன் முன்வைக்க முடியவில்லை?

# வில்லுப்பாட்டு உருவான கதை

# திரட்டு

அம்பலவாணனின் "பல்சுவை விருந்து" நூலிலிருந்து:

மங்கையர்க்கரசி என்ற படம் பி.யூ.சின்னப்பா - கண்ணாம்பா நடித்து வெளிவந்தது. இதில், கண்ணாம்பா பேச வேண்டிய ஒரு வசனம், "நெருப்புச் சூரியனுக்கு தெரியும், நிரபராதி நானென்று..." என்பது!

சூரியனே நெருப்புக் கோளம் தானே? பிறகு எதற்கு அதை, "நெருப்புச் சூரியன்" என்று கூற வேண்டும் என்ற சந்தேகம் கண்ணாம்பாவுக்கு ஏற்பட்டது. இதைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு, படத்தின் வசனகர்த்தாவிடம் விடப்பட்டது.



அந்த வசனகர்த்தா, "நிலா வெள்ளையாகத் தானே இருக்கிறது? பின், ஏன் அதை வெண்ணிலா என்று சொல்கிறோம்..." என்று மடக்கினார். இந்த பதில், கண்ணாம்பாவை திருப்திப்படுத்தி விட்டது.

அந்த வசனகர்த்தா - மறைந்த கவிஞர் சுரதா!

மு.கோவிந்தராசன் எழுதிய, "கவியரசு கண்ணதாசன்" நூலிலிருந்து:

தமிழ்ச் சங்க விழாவில் கலந்து கொள்ள அமெரிக்கா சென்றிருந்த கண்ணதாசன், அக்., 17, 1981 அன்று, இந்திய நேரப்படி இரவு, 10:45 மணிக்கு, (அமெரிக்காவில் பகல், 12:00 மணி) அமெரிக்க மருத்துவமனையில் காலமானார். அப்போது, அவருக்கு வயது 54.



கண்ணதாசனின் உடலை சென்னைக்கு கொண்டுவர, அன்றைய முதல்வரான எம்.ஜி.ஆர்., ஏற்பாடு செய்திருந்தார். தமிழகத்தின் அரசவைக் கவிஞராக கண்ணதாசன் இருந்ததால், அவரது சிகிச்சை செலவு முழுவதையும், தமிழக அரசே ஏற்கும் என்றும் அறிவித்திருந்தார் எம்.ஜி.ஆர்.

கண்ணதாசனின் இரண்டாவது மனைவி பார்வதி, மூன்றாவது மனைவி வள்ளியம்மை, மகன் கலைவாணன் ஆகியோர் அமெரிக்காவில், கண்ணதாசன் உயிர் பிரியும்போது, கண்ணதாசன் அருகிலேயே இருந்தனர்.

சென்னை தியாகராய நகரில், கண்ணதாசனின் வீட்டில் அவருடைய உருவப்படம் அலங்கரிக்கப்பட்டு குத்துவிளக்கு ஏற்றி வைக்கப்பட்டிருந்தது. முதல் மனைவி பொன்னம்மாளும், மற்ற உறவினர்களும், படத்தின் அருகில் அமர்ந்து கண்ணீர் விட்டு கதறி அழுதவண்ணம் இருந்தனர். தி.மு.க., தலைவர் கருணாநிதி, கண்ணதாசன் வீட்டிற்குச் சென்று, கண்ணதாசனின் மனைவி, மகன்களுக்கு ஆறுதல் கூறினார்.

விமானம் மூலம் கண்ணதாசன் உடல் சென்னைக்கு கொண்டு வரப்பட்டு, நடிகர் சங்க கட்டடத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது; உடல் மீது அவர் எழுதிய, "இயேசு காவியம்" புத்தகம் வைக்கப்பட்டு இருந்தது!



மு.இராகுலதாசனின் "பி.எஸ். ராமையா" என்ற நூலிலிருந்து:

"எழுத்தாளர்களில் சூரர் என்றால் அவர் பி.எஸ். ராமையாதான்" என்கிறார் கு. அழகிரிசாமி. மேலும் அழகிரிசாமி அவரை, "சுயேச்சை எழுத்தாளராக இருந்தபோதிலும் பி.எஸ். ராமையா யாருடைய தயவுக்காகவும் பணிந்து போனதில்லை; முகஸ்துதி செய்ததில்லை. உலகத்தோடு போராடினார் வெற்றியும் பெற்றார்" என்று குறிப்பிடுகிறார்.

துணிவு பி.எஸ். ராமையாவின் பிறவிக்குணம். "ஜயபாரதி" பத்திரிகையின் உரிமையாளர் ஏ.ஆர்.வி. ஆச்சார், "இது எங்கள் பத்திரிகை, எங்கள் கொள்கையைத்தான் எழுத வேண்டும்" என்று வற்புறுத்தியபோது, "நான் உங்கள் கொள்கையை ஆதரிக்கவில்லை, போய் வருகிறேன்" என்று தனது வேலையைத் தூக்கியெறிந்துவிட்டுப் போனார்.

"சரியோ தப்போ அவர் எழுதியவைகளுள் ஒரு கமா, முற்றுப்புள்ளிகூட மாற்றச் சம்மதிக்க மாட்டார். அப்படி ஒரு திடம். யாரேனும் மாற்றினால், "பேனாவை கீழே வைத்து விடுவேன்" என்று எச்சரித்து விடுவார். வணங்காமுடி மன்னர்; எழுத்தில் கௌரவம், சுயமரியாதை விஷயத்தில் தன்னையே மாய்த்துக்கொள்ளும் அளவுக்கு வெகு கண்டிப்பானவர். பொல்லாத கண்டிப்பு" என்று நினைவுகூர்கிறார் வெ. சந்தானம்.



"பொதுக் கூட்டங்களும், சுவையான நிகழ்ச்சிகளும்" என்ற நூலிலிருந்து:

பொள்ளாச்சியில் ஒரு பொதுக்கூட்டம் பி.எம். சுப்பிரமணியம் என்பவர், இந்திய - சோவியத் நட்புறவு பற்றி சொற்பொழிவு ஆற்றி முடித்த பின், "தோழர் மா.வேலாயுதம் துண்டு ஏந்தி வருவார் உங்களால் முடிந்த அளவு நிதி உதவி அளிக்க வேண்டுகிறேன்..." என்று கேட்டுக் கொண்டார்.

வசூல் செய்வதற்கான துண்டிற்காக, மேடையில் இருந்த பிரமுகர்களைப் பார்த்தார் வேலாயுதம். அவர்களில் சுப்பிரமணியத்தைத் தவிர வேறு யார் தோளிலும் துண்டு இல்லை. எனவே, சுப்பிரமணியத்திடம் சென்று, அவர் தோளில் போட்டிருந்த மேல் துண்டைக் கொடுக்கும்படி கேட்டார். பிடிவாதமாக, கொடுக்க மறுத்து விட்டார் சுப்பிரமணியம். வேறு வழியின்றி, அவரது மேல் துண்டை பற்றி இழுத்தார் வேலாயுதம். துண்டை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, வேலாயுதத்தை தள்ளி விட்டார் சுப்பிரமணியம்.

விடாக்கண்டனாக இருக்கிறாரே என்ற மனச் சங்கடத்துடன், ஒரு மஞ்சள் பையைத் தேடிப் பிடித்து, தம் வசூல் வேலையைத் துவக்கினார் வேலாயுதம். கூட்டம் முடிந்து, அனைவரும் திரும்பிக் கொண்டிருந்தபோது, வேலாயுதத்தை அருகில் அழைத்து, தாம் தோளில் போட்டிருந்த துண்டை விரித்து காட்டினார், சுப்பிரமணியம். அதிலே நிறைய இடங்களில் பொத்தல்களும், கிழிசல்களும் இருந்தன.

"இதை விரித்தால், என் மானமும் போகும் வசூலின் போது, இதில் விழும் காசுகளும் கீழே விழுந்துவிடும். அதனால் தான், துண்டைக் கொடுக்கவில்லை..." என்றார் சுப்பிரமணியம். வேலாயுதத்தின் கண்கள் பனித்தன.

# சினிமா சினிமா

• 1978 ஆம் ஆண்டு வெளியான "அவள் அப்படித்தான்" படத்தின் இயக்குநரும் தயாரிப்பாளருமான ருத்ரய்யா கடந்த செவ்வாய்க்கிழமை காலமானார். ரஜினிகாந்த், கமலஹாசன், ஸ்ரீபிரியா உள்ளிட்ட பிரபலங்கள் நடித்த அந்தப் படம், இந்தியாவில் வெளியான மிகச்சிறந்த 100 படங்களில் ஒன்றாக மதிப்பிடப்படுகிறது. திரைப்படக்கல்லூரியில் பயின்றுவிட்டு, பாலச்சந்தரின் உதவியாளராகவும் இருந்த ருத்ரையா இயக்கிய முதல் படம் "அவள் அப்படித்தான்".

• எலி என்ற படத்தில் புலனாய்வு அதிகாரி வேடத்தில் நடிக்கும் வடிவேலு, அதற்காக, 15 கெட்டப்களில், தன் ஹேர் ஸ்டைலை மாற்றி நடிக்கிறார். முந்தைய படமான, தெனாலி ராமனில் தன் காமெடி, ரசிகர்களை சிரிக்க வைப்பதற்கு மாறாக எரிச்சலை ஏற்படுத்தியதால், இந்த முறை நல்ல காமெடியாக தர வேண்டும் என்பதற்காக, தன் காமெடி இலாகாவை மீண்டும் ஒன்று கூட்டியிருக்கிறார்.

• த்ரிஷா தற்போது அஜித்துடன் "என்னை அறிந்தால்" படத்தில் நடித்து வருகிறார். த்ரிஷாவும் தெலுங்கு நடிகர் ராணாவும் காதலித்து வந்ததாக சில மாதங்களுக்கு முன் கூறப்பட்டது. ஆனால், சமீபத்தில் வெளியான "வாயை மூடி பேசவும்" படத்தின் இயக்குநரும், பல படங்களின் தயாரிப்பாளருமான வருண் மணியனுக்கும் த்ரிஷாவுக்கும் நிச்சயதார்த்தம் நடைபெற்றதாக இப்போது ட்விட்டர் தளத்தில் புகைப்படங்களுடன் தகவல்கள் வெளியாகியுள்ளன. இருவரும் காதலித்து வருவதாகவும் விரைவில் திருமணம் செய்து கொள்வார்கள் என்றும் அவர்களுக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

• பெரும்பாலும் நடிகைகளுக்கு, நடிகர்கள் சிபாரிசு செய்வது தான் வழக்கம். சமீபகாலமாக, அதில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆர்யா தன்னிடம் வரும் நல்ல கதைகளை விஷாலிடம் அனுப்பி விடுகிறார். விஷாலோ, விக்ராந்தை வைத்து படம் தயாரிக்கிறார். அதேபோல, கத்தி படத்துக்கு பின், சிம்புதேவன் இயக்கத்தில் நடிக்கும் விஜய்யிடம் ஒரு நிறுவனம் கால்ஷீட் கேட்டுள்ளது. அதற்கு, "தற்சமயம் நான் நடிக்க இயலாது. அதனால், ஜீவாவை வைத்து ஒரு படம் செய்யுங்கள் அந்தப் படம் முடிந்ததும் நான் உங்களுக்கு கால்ஷீட் தருகிறேன்..." என்றிருக்கிறார்.

• தனுஷ், புதுமுகம் அமைரா நடிக்கும் "அனேகன்" படத்தை இயக்கி வருகிறார் கே.வி.ஆனந்த். நடிகர் கார்த்திக்கும் முக்கிய வேடம் ஏற்கிறார். திருவாசகத்தில் "அனேகன்" என்ற வார்த்தைக்கு சிவபெருமான் என்பவர் ஒருவர் அல்ல; பல ரூபத்தில் உள்ளவர் என்பது பொருள். தலைப்புக்கு ஏற்றவாறு தனுஷ் 4 விதமான வேடங்களை ஏற்று நடித்திருக்கிறார்.

• ரஜினியின் பொலிவுட் நண்பர் சத்ருகன் சின்ஹாவின் மகள் சோனாக்ஷி சின்ஹா "லிங்கா" படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகிறார்.




"ரஜினியுடன் பணியாற்றிய நாள்கள் என் வாழ்நாளில் மறக்க முடியாதது" என்று ரஜினிக்கு புகழாரம் சூட்டி இருக்கிறார்.

• இடைவேளைக்கு முன் ஒரு கதையாகவும், இடைவேளைக்குப் பின் மற்றொரு கதையாகவும் உருவாகி வருகிறது "டூரிங் டாக்கீஸ்." நீண்ட இடைவெளிக்குப் பின் எஸ்.ஏ.சந்திரசேகரன் எழுதி, இயக்கி இப்படத்தில் நடிக்கிறார்.

• "பீட்சா", "ஜிகர்தண்டா" படங்களின் இயக்குநரான கார்த்திக் சுப்புராஜ், குறும்பட உலகத்தில் இருந்து சினிமாவுக்கு வருபவர்களுக்கு வழிகாட்ட பெஞ்ச் ஸ்டோன்" என்ற புதிய நிறுவனத்தைத் தொடங்கியிருக்கிறார்.

• நண்பேன்டா படத்திற்கு வாங்கிய, முன் பணம், 40 இலட்ச ரூபாயை திருப்பித்தர மறுத்து விட்டதால், காஜல் அகர்வால் மீது தென்னிந்திய பட தயாரிப்பாளர்கள் அதிருப்தியில் உள்ளனர்.

• "நயன்தாரா தான் என் கனவுக்கன்னி..." என்று கூறி வந்த ஜெயம் ரவி, இப்போது அவருடன் "தனி ஒருவன்" படத்தில் நடிக்கிறார். ரவியின் சகோதரர் ராஜா படத்தை இயக்குகிறார்.

• உடம்பில் கொழுப்பு சேராமல் இருப்பதற்காக, தினமும் ஆயுர்வேத மருந்துகளை எடுத்து வருகிறார் நயன்தாரா.

• ஒரு பெண்ணுக்கு கொலை மிரட்டல் விடுத்தனர் என்று நடிகை சனாகானும், அவரது காதலர் இஸ்மாயில் கானும் மும்பையில் கைதாகி, விடுதலையாகியிருக்கின்றனர்.

• "ஜோடி நடிகை இல்லாத கதைகளில் நடிப்பது தான், எனக்கு அதிகம் பிடித்திருக்கிறது..." என்கிறார் விஜயசேதுபதி.

• "இசை" படத்தில் அறிமுகமாகியுள்ள சாவித்ரிக்கு, "என் படம் வெளியான பின் தான், புதிய படங்களில் ஒப்பந்தமாக வேண்டும்..." என்று நிபந்தனை விதித்துள்ளார் எஸ்.ஜே.சூர்யா.

## கிளி. அரச அதிபர் இத்தாலி பயணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் நேற்று சனிக்கிழமை இத்தாலிக்கு பயணமானார்.

உள்நாட்டு இடப்பெயர்வு தொடர்பாக யு.என்.ஏச்.சி.ஆர் நிறுவனத்தால் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் டிசம்பர் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ள செயலமர்வில் கலந்து கொள்ளும் வகையில் அரச அதிபருடன் மீள் குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளர் என். எம். றஜீமுல்லாவும் சென்றுள்ளார்.

உலக நாடுகளிலுள்ள 30 பேர் இதில் கலந்து கொள்ளவுள்ள நிலையில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இவர்கள் இருவரும் சென்றுள்ளனர். (90)

## கண்வில்லைகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 60 வயதுக்கு மேற்பட்ட ஐந்து பேருக்கு கண்வில்லைகள் கோப்பாய் பிரதேச சமூக அபிவிருத்தித் கிளையால் வழங்கப்பட்டன.

கண் பரிசோதனைக்கான வைத்திய அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பித்தவர்களுக்கே இவை வழங்கப்பட்டன. (08)

# பழைய பாதைகளை கைவிடுங்கள்; புதிய பாதைகள் காத்திருக்கின்றன

## மகளிர் அமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வில் ஜெகன்



எமது பகுதி பெண்களது சமூக நலன் கருதிய சிந்தனைகள், தேவைகளை தட்டிக்கொடுத்து தூக்கிநிறுத்த எமது தேசத் தலைவர்கள் முன்வருவார்களானால் எமது பிரதேசத்தினதும் சமூகத்தினதும் வளர்ச்சியை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.

வலி.தென்மேற்கு பகுதிக்கான மாதர் அமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு வலி.தென்மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ஜீவா தலைமையில் கட்சி அலுவலகத்தில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிதாக உதயமான மாதர் அமைப்பு உறுப்பினர் மத்தியில் தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது

விட்டுக்கொடுப்பும் தூர நோககும் எமது இனத்திடமிருந்து அழிந்துவிட்டது இதன் பிரதிபலிப்புக்கள் தான் தமிழர்கள் கடந்தகாலத்தில் அனுபவித்த வலிகளுக்கு காரணம் எனலாம்.

இனிவருங்காலத்தில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் அனைத்து செயற்பாடுகளும் மக்கள் மத்தியிலுள்ளவர்களைக்கொண்டு துல்லியமான வகையில் மேற்கொள்வதாகத்தான் இருக்கும். இது தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நீண்டநாள் ஆசையாகவும் இருக்கின்றது. அவரது நோககங்களை நிறைவேற்ற நீங்களும் அவருடன் கைகோர்த்து எமது மக்களது தேவைகளை திறம்பட நிறைவேற்றிக்கொடுப்பதற்கு உழைக்கவேண்டும்.

கடந்தகாலத்தில் யுத்த வடுக்களையும் வேதனைகளையும் அதிகளவு சுமந்தவர்கள் எமது பெண்கள்தான். இத்தகைய பெண்களது மனங்களில் எதிர்கால வாழ்க்கையின் ஒளிக்கீற்றுக்களை பெற்றுக்கொடுப்பவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருக்கின்றார். அவரது கரங்களில் அரசியல் அதிகாரம் கிடைக்குமானால் நிச்சயமாக தமிழ் மக்களது எதிர்காலம் பூரணமான நிலையை அடைந்துவிடும் என்றார்.

## பழ மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வு

(திருநெல்வேலி)

மரம் நாட்டு மாதத்தை முன்னிட்டு இலங்கை வங்கி நாடு முழுவதும் பத்தாயிரம் பழ மரக்கன்றுகளை நாட்டுவதற்கு முன்வந்துள்ளது.

இதன் ஒரு அங்கமாக கைதடி அரச முதியோர் இல்லத்தில் இருபது பழமரக்கன்றுகள் இலங்கை வங்கியினால் அண்மையில் நாட்டி வைக்கப்பட்டன. மா, பலா, கொய்யா, மாதுளை போன்ற கன்றுகளே நாட்டப்பட்டன.

அத்துடன் கைதடியை அண்டிய பிரதேசங்களில் 120 பழ மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டுள்ளன. (137)

## "அமைதியின் சொற்கள்" இறுவட்டு வெளியீடு

(திருநெல்வேலி)

"அமைதியின் சொற்கள்" என்னும் தலைப்பில் இறுவட்டு ஒன்று அண்மையில் கைதடி அரச முதியோர் இல்லத்தில் வெளியிடப்பட்டது.

55 இறுவட்டுக்களில் காணப்பட்ட விபரங்களைத் தொகுத்து அரை மாணித்தியாலத்தில் பார்க்கக்கூடிதாக இவ் இறுவட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நேற்று முன்தினம் தொடக்கம் ஒவ்வொரு வாரமும் இறுவட்டு தொடர்பான நிகழ்வுகள் முதியோர்களுக்காக நடைபெறவுள்ளன. (137)





த.பரமலிங்கம், நவாலியுர்க் கவிராயரின் 'பு,மணி' சிறுவர் கவிதை நூல் வெளியீட்டுவிழா நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்றது. முதல்பிரதியை நல்லூர் பிரதேச செயலர் மற்றும் கலாசாரப் பேரவைத் தலைவருமான பா.செந்தில் நந்தனன் வழங்க பிரபல சட்டத்தரணி தேவராசா ரெங்கன் பெற்றுக்கொள்கிறார். நூலாசிரியர் ஏற்புரை ஆற்றுவதையும் காணலாம். (68)

## இப்படியும் நடக்கிறது திருடர்களில் தந்திரம்

(திருநெல்வேலி)

தாவடி, வன்னியசிங்கம் வீதியில் ஒரு மோட்டார் சைக்கிளில் இருவர் வந்து வீடு ஒன்றின் முன்பாக இறங்கியுள்ளனர்.

தற்செயலாக அவ்வீட்டுக்கு வெளியே வாசல் பக்கம் வந்த வீட்டுக்காரப் பெண்மணி இவர்களைக் கண்டு ஏன் நிற்கிறீர்கள்? என்ன வேண்டும்? எனக் கேட்டுள்ளார்.

தொலைபேசி பழுது என இவ்வீட்டிலிருந்து அறிவிக்கப்பட்டதால் அதனைத்திருத்துவதற்காகத் தாங்கள் வந்திருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இவர்கள் மீது சந்தேகம் கொண்ட அப் பெண்மணி வீட்டுக்குள் திரும்பிச்சென்று அங்கிருந்த தனது மகளைக் கவனமாக இருக்கும் படி சொல்லிவிட்டுத் திரும்பி வந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் ஓடிமறைந்து விட்டதாக அப் பெண்ணினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனசந்தடி குறைந்த வீதிகள், ஒழுங்கைகளுக்குள் இப்படிப்பட்ட திருடர்கள் பகலிலும் திரிவதால் பொதுமக்களை மிக அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (137)

## பொன்விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் குப்பிளான் கிராம உதயப் பொன்விழா நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மேற்படி கழகத் தலைவர் வி.செந்தில்குமார் தலைமையில் இடம்பெற்றது. (48)

## ஆலை உடைத்து துணிகர திருட்டு

நள்ளிரவில் ஆலை ஒன்றினுள் புகுந்த திருடர்கள் நெல்-மா அரைக்கும் மோட்டார்களையும் அரைக்கும் இயந்திரங்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வியாழன் இரவு பருத்தித்துறை முனைப் பகுதியில் உள்ள ஆலையில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி விடயமாக மேலும் தெரியவருகையில்,

சுமார் 5இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார்கள், அரைக்கும் இயந்திரங்கள், மற்றும் ஆலையுடன் சம்பந்தப்பட்ட பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக உரிமையாளர் தம்பாப்பிள்ளை கெங்காதரன் பருத்தித்துறை பொலிஸில் முறையிட்டுள்ளார். (18)

## வலிமேற்கு பகுதியில் காணி வழங்கப்பட்டோர் விபரம்

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் பிரதேச சபையின் காணிகள் சங்கானையில் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதில் கீழ் வரும் 28 குடும்பங்கள் சங்கானை தெற்கு ஜே/180 பகுதியில் பிரதேச சபையின் தவிசாளர், உறுப்பினர்களின் கரங்களால் மக்கள் காணி உறுதிப்பத்திரங்களை பெற்றனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறுசெல்லையா தர்மராசா, நாகமுத்து பேரானந்தம், கந்தசாமி தங்கராசா, கபிரியேல் செல்வராசா, சோமு ரவி, பரமு செல்வநாயகம், குணநாதன் ரஞ்சித்குமார், கந்தன் சதாசிவம், குணநாதன் பொற்கொடி, முருகன் நவரத்தினம், கணேஷ் பாக்கியராஜா, நாகலிங்கம் செல்வராசா, முருகேசு நாகராசா, காளிமுத்து முருகையா, திருச்செல்வம் தெய்வானைப்பிள்ளை, மாரிமுத்து சிவஞானம், குகனேசன் கேதீஸ்வரி, சிவனொளி ரஞ்சினி, நடேசு லலிதகுமார், மாணிக்கம் குணசேகரம், கந்தையா மகேஸ்வரி, தியாகராசா யோகேஸ்வரி, கதிரன் சிவம், இரத்தினசிங்கம் மரியகொறற்றி, சின்னத்துரை ரவீந்திரன், கந்தையா ஜெயதீசன், சந்திராசா குகனேஸ்வரி.

## கொடுப்பனவு

அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகம் கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாற்றுவலுவுடைய மாணவர்களுக்காக ஒரு தொகை நிதியினை வழங்கவுள்ளது.

மாற்றுவலுவுடைய மாணவர்களின் கல்வித் தேவைக்காகவும் பாடசாலை செல்லும் போக்குவரத்துச் செலவுகளுக்காகவும் கற்றல் உபகரணகொள்வனவுக்காகவும் 25 ஆயிரத்து 250 ரூபாவை வழங்கவுள்ளது. (18)

# அராலி - ஊரத்தி மக்களுக்கும் விரைவில் காணி உறுதிகிடைக்கும்

## பிரதேச சபை உறுப்பினர் சசிதரன் தெரிவிப்பு

வலி.மேற்கு பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய சூழலில் வாழ்பவர்கள் அராலி ஊரத்தி பிரதேச மக்கள். இப்பிரதேச மக்கள் தமக்கு காணி உறுதிகள் வழங்க வேண்டும் என கடந்த 10வருடங்களாக கோரி வருகின்றனர்.

ஆனால் அவர்களது கோரிக்கை வலுப்பெறுவதற்கு முன் சங்கானை மக்கள் ஒற்றுமையுடன் செயற்பட்டு காரியத்தை வென்றுள்ளனர்.

இவ்வாறு வலி. மேற்கு பிரதேசசபை உறுப்பினர் த. சசிதரன் தெரிவித்தார்.

வலிமேற்கு கலாசார மண்டபத்தில் நிலபகிர்வு நிகழ்வில் கலந்து கொண்ட த.சசிதரன் மேலும் கூறுகையில்,

வலி.மேற்கு பிரதேச சபை ஆரம்பித்த முதல் கூட்டத்திலேயே சங்கானை, அராலி ஊரத்தி மக்களின் காணி உறுதி வழங்குவது தொடர்பில் சகல உறுப்பினர்களாலும் பிரச்சினை முன் வைக்கப்பட்டது.

ஆனால் முன்னாள் செயலாளர் சு.புத்திசிகாமணியின் காலத்தில் வழங்க முடியாத சூழ்நிலை காணப்பட்டது. இன்று எமது சபை உறுப்பினர்கள் முன மொழிந்து சபை அங்கீகாரத்துடன் முன்னாள் பிரதம செயலாளர் இ.ரங்கராஜன் வடக்கு ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரின் அனுமதியுடன் யாழ். மாவட்ட மேலதிக பதிவாளர் நாயகத்தினால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு முறைப்படியாக சங்கானையில் உள்ள 28 குடும்பங்களுக்கு காணிஉறுதி பத்திரம் வழங்கப்பட்டு விட்டது.

இதற்கு சபையின் எதிர்க்கட்சி தலைவர் சி.பாலகிருஸ்ணன் அவர்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளார்.

எமது அடுத்த இலக்கு அராலி மக்களுக்கு வழங்குவது என்பதாகும்.

இத்திட்டத்தினையும் தவிசாளர் முன்னிலையில் நடைமுறைப்படுத்தி அராலியில் உள்ள 23 குடும்பங்களுக்கும் வழங்கி உதவ நாம் பாடுபடுவோம் என்றார் உறுப்பினர் சசிதரன்.

# கல்வி நிர்வாக சேவைக்கு கல்வி அமைச்சில் நேர்முகம்

## கடமை நிறைவேற்று உதவிப்பணிப்பாளர்களுக்கு அழைப்பு

நாடளாவிய ரீதியில் வலயக் கல்விப்பணிமனைகளில் பாட ரீதியான கடமை நிறைவேற்று உதவிக் கல்விப்பணிப்பாளராக சேவையாற்றி வருபவர்களை கல்வி நிர்வாக சேவைதரம் IIIஇற்குள் உள்ளீர்ப்புச் செய்வதற்கான நேர்முகத்தேர்வு கல்வியமைச்சில் நடைபெற்று வருகிறது.

மேற்படி நேர்முகத் தேர்வுக்குரியவர்கள், கல்வியமைச்சின் மேலதிக செயலாளரினால் கடிதம் மூலம் அழைக்கப்பட்டுள்ளனர்.

நேர்முகத்தேர்வு நவம்பர் மாதம் 20ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது.

நேர்முகத்தேர்வுக்குச் செல்வோர் அழைப்புக்கடிதம் பிறப்புச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, முதல்நியமனக்கடிதம், கல்வி, தொழில் தகைமைச் சான்றிதழ்கள் கடமை நிறைவேற்று உதவிக்கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்ட கடிதம் முதலான முக்கிய ஆவணங்களையும் அவற்றின் போட்டோப் பிரதிகளையும் வலயப் பணிப்பாளர் உறுதிசெய்த கோவையொன்றுடன் வரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (06)



அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற வெற்றித்தமிழ் விழாவின் காட்சி... (48)

# மரக்குற்றிகள் கடத்தல் சந்தேக நபர்கள் கைது

(நெல்லியடி)

நெல்லியடி சமியன் அரசடிப்பகுதியில் சட்டவிரோதமாக வேப்பமரக்குற்றிகளை கடத்திச் செல்ல முற்பட்ட சந்தேக நபர்களை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர்கள் வேப்பமரக் குற்றிகளை சிறிய உழவு இயந்திரத்தில் ஏற்றி வரும் பொழுது நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலை அடுத்து பொலிஸார் சந்தேக நபர்களை வழிமறித்து சோதனை செய்த போது இவர்கள் சட்ட விரோதமாக மரக்குற்றிகளை ஏற்றிவந்தமை தெரியவந்தது.

இதனை அடுத்து பொலிஸார் குறித்த நபர்களை உழவு இயந்திரத்துடன் கைது செய்துள்ளதுடன் இவர்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். (18)

# மாணவன் சாதனை

(தென்மராட்சி)

தரம் 5 புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளிக்கமைய யாழ். வரணி சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஒரு மாணவன் சித்தியடைந்ததாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

ர.பரத் என்ற மாணவனே 153புள்ளிகளைப்பெற்றுள்ளார்.

இப்பாடசாலையில் ஐந்து வருட காலப்பகுதியில் இந்த ஆண்டே ஒரு மாணவன் சித்தி பெற்று பாராட்டை பெற்றுள்ளார். (150)

# மோட்டார் சைக்கிளில் வந்தவர் மாட்டுடன் மோதி பலி

வவுனியா - மன்னார் வீதியில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவர் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியில் நின்ற மாடு ஒன்றுடன் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே 25வயதான குறித்த இளைஞர் பலியாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு இது குறித்த மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு கிழ அரசனுக்கு ஒரு அழகிய இளம் மனைவி இருந்தாள். அவசரமாக எதிரி நாட்டு அரசனுடன் போரிட வேண்டிய நிலை அவனுக்கு ஏற்பட்டது. போருக்குப் புறப்படும்போது தன் இளம் மனைவியின் மீது அவனுக்கு நம்பிக்கை இல்லை. "கற்பு காப்புப் பட்டி" (Chastity Belt) ஒன்றை அவன் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்தான். அதை எடுத்து இளம் மனைவியின் இடுப்பில் பொருத்திப் பூட்டிப் புறப்படும்போது அவனுக்குச் சற்றே இரக்கம் தோன்றியது. ஒருவேளை தான் போரிலிருந்து திரும்பாவிட்டால் அவளது இளமை பாழாகுமே என நினைத்த அவன் தனது நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமான ஒரு இளம் அமைச்சரிடம் அந்த கற்பு காப்பு பெல்டின் சாவியைக் கொடுத்து, ஒருவேளை தான் போரில் இறந்து போனதாகச் செய்தி வந்தால் அரசிக்கு அணிவிக்கப்பட்ட பெல்டின் பூட்டைத் திறந்து விடுமாறும், அதுவரை இந்த விடயம் யாருக்கும், குறிப்பாக அரசிக்குத் தெரியக் கூடாது எனவும் சொல்லி அகன்றான்

"அரசன் போருக்குப் புறப்பட்டுச் சென்று அரை மணிகூட ஆகியிருக்காது யாரோ குதிரையில் அதி வேகமாக, "மன்னா... மன்னா" எனக் கத்திக் கொண்டே விரைந்து வருவதைக் கண்ட மன்னன் தேரை நிறுத்தித் திரும்பினான். சாவியை ஒப்படைத்து விட்டு வந்த அரசனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான இளம் அமைச்சன்தான் அவன்.

மூச்சிரைக்க அவன் சொன்னான்... "மன்னா, தப்பான சாவியைத் கொடுத்துவிட்டுப் போய் விட்டீர்கள். பெல்ட் சாவிக்குப் பதிலாக அலுமாரி சாவியைக் கொடுத்து விட்டீர்கள் என நினைக்கிறேன்."

*** *** *** ***

நல்ல வசதியான சோம்பேறி ஒருவன் வேலைக்குப் போகாமல் நண்பர்களுடன் எப்போதும் சீட்டாடிக் கொண்டு காலத்தை கழித்தான்.

ஒருநாள் அவன் அப்படி விளையாடிக் கொண்டிருந்த போது உள்ளிருந்து அவன் மனைவி அழைத்தாள். "உள்ளே வந்து பழையது சாப்பிட்டுவிட்டுப் போங்கள்" என்றாள். அதனைக் கேட்ட அவனது நண்பர்கள் திகைப்படைந்தனர். "இவ்வளவு வசதியிருந்தும் இவன் பழையது சாப்பிடுகிறவனாயிருக்கிறானே' என்று. அவனும் எழுந்து உள்ளே போனான். அங்கே அவனுக்கு மனைவி அறுசுவை விருந்து சமைத்திருந்தாள்.

"இப்படி சமைத்துவிட்டு, பழையது சாப்பிட வாங்க என்று கூப்பிட்டு, என் நண்பர்கள் முன்னே அவமானப்படுத்திவிட்டாயே", என்றான் கணவன். அதற்கு,

"சாப்பாடு சூடான சாப்பாடுதான். ஆனால் இது நீங்கள் சம்பாதித்ததில் சமைத்தது இல்லையே... உங்க முன்னோர்கள் சம்பாத்தியத்தில் வந்ததுதானே... அதனால்தான் "பழையது' என்றேன்" என்றாள் மனைவி.

*** *** *** ***

அரசரைப் பாடி, பரிசு பெற்றுச் செல்ல புலவர் ஒருவர், அரசவைக்கு வந்தார். பருத்த உடல் கொண்டிருந்த மன்னரைப் பார்த்ததும், 'ஆகா... நீங்கள் மகாராஜா... பசி வந்தால், ஆனையும் தின்பீர்கள், பூனையும் தின்பீர்கள்...' என்றார்.

'ஓய், புலவரே... நிறுத்தும் இது தான் எம்மைப் புகழ்ந்து பாடும் அழகா...' என்று கோபித்தார், மன்னர்.

'அரசே... நான் தவறாகவே சொல்லவில்லை; அரசராகிய தாங்கள் ஆனையும், ஆநெய் அதாவது, பசு நெய்யையும், பூனையும் – பூநெய், அதாவது தேனையும் உண்பீர்கள என்று கூறினேன் இது தவறா?' என்றார்.

*** *** *** ***

ஒரு ஓவியன் தன் கையில் சுருட்டி வைத்திருந்த ஒரு தாளில் பசுவும் புல்லும் வரைந்து இருப்பதாகச் சொன்னான்.

சுருட்டி வைத்திருந்த தாளைப் பிரித்து பார்த்தால், அதில் பசுவும் இல்லை, புல்லும் இல்லை.

உடனே அங்கிருந்த ஒருவன், "இந்தப் படத்தில் புல் எங்கே?" என்று கேட்டான்.

அதற்கு அந்த ஓவியன், "புல்லைப் பசு தின்று விட்டது" என்றான்.

"அப்படியானால்... பசு எங்கே?" என்று கேட்டான் இன்னொருவன்.

உடனே அந்த ஓவியன், "பசு புல்லைத் தின்று விட்டதால் அதை விரட்டி விட்டுட்டேன்" என்றான்.

ஓவியனின் திறன் ஓவியத்திலில்லை. வாயில் இருந்தது.

# மைத்திரியை சந்திக்க கூட்டமைப்பு முயற்சி

## நேரம் ஒதுக்க அவர் தயாரில்லை




(கொழும்பு)

எதிரணியின் பொது வேட்பாளராக போட்டியிடவுள்ள மைத்திரிபால சிறிசேனவை விரைவில் சந்தித்துப் பேசவுள்ளதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பொதுவேட்பாளருக்கு கூட்டமைப்பு ஆதரவளிக்குமா என்று சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அவர், பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள மைத்திரிபாலவை கூட்டமைப்பு சந்திக்கும் சந்திப்பின் பின்னர் பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதா இல்லையா? என்பது குறித்து தீர்மானிக்கப்படும்.

இதற்கு மேலதிகமாக எதிர்க் கட்சிகளின் ஏனைய கட்சிப் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தப் படும்.

இதுவரையில் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது அல்லது என்ன தீர்மானம் எடுப்பது என்பது குறித்த முடிவுகளை எடுக்கவில்லை. எவ்வாறெனினும், மைத்திரிபாலவுடனான சந்திப்பின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுதித் தீர்மானமொன்றை எடுக்கும் என சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

# துரோகம் செய்து விட்டார் மைத்திரிபால

## அஸ்வர் சீற்றம்



(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பாரிய துரோகம் இழைத்துள்ளதாக ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இதுவரைகாலமும் அமைச்சராக பதவி வகித்த மைத்திரிபால சிறிசேன, குடும்ப அரசியல் பற்றி எவ்வாறு குற்றம் சுமத்த முடியும்?

சிறிமாவோ பண்டாரநாயக்க நாட்டை சிறந்த முறையில் ஆட்சி செய்தார். எனினும் அவரது மகள் சந்திரிக்கா, மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து சூழ்ச்சி செய்கின்றார்.

மக்களுக்கு நலன்களை ஏற்படுத்திய மதத் தலைவர்கள் அரசியல் தலைவர்களுக்கு எதுவும் நடக்காது. மைத்திரிபாலவின் நடவடிக்கை பாரியளவிலான துரோகமாகும்.

சர்வதேச சூழ்ச்சித் திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதனை ஜனாதிபதி அம்பலப்படுத்தினார்.

கடந்த சில தினங்களில் பல மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் பற்றி நாட்டுக்கு தெரியப்படுத்துவோம்

பாரிய கற்பாறையை அசைத்தாலும், மெதமுலனவில் வீற்றிருக்கும் ஜனாதிபதியை அசைக்க முடியாது என அஸ்வர் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். வரவு செலவுத்திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# பெரும்பான்மை பலம் இப்போது எங்கள் வசம்

## திஸ்ஸ சொல்கிறார்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளுக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உண்டு என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். தேவையான அரசியல் சாசன திருத்தங்களை மேற்கொள்ளும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் தற்போது எதிர்க்கட்சிகள் வசம் உள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சி துண்டு துண்டாக சிதைவடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் பெரும் எண்ணிக்கையிலான ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக தேர்தல் நடத்தப்பட்டாலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக் கொள்ள சாத்தியமுண்டு என தெரிவித்துள்ளார். ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி போன்ற கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# களுத்துறையில் துப்பாக்கிச் சூடு ஐ.தே.கட்சி உறுப்பினர் காயம்

(கொழும்பு)

ஆளும் கட்சியினர் எதிர்க் கட்சியில் இணைந்து கொண்டமைக்காக கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்தவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. களுத்துறை மாகொன்ன பயாகல பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சில அமைச்சர்கள், ஆளும் கட்சியை விட்டு விலகி எதிர்க்கட்சியில் இணைந்து கொண்டமையை கொண்டாடும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் பட்டாசு கொளுத்திக் கொண்டிருந்த போது தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சமிந்த ரணசிங்க என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

காயமடைந்த சமிந்த முதலில் களுத்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இனந்தெரியாத நபர்கள் கார் ஒன்றில் வந்து தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளதாகத தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை, மாவத்தகம பிரதேசத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியினரின் வாகனத் தொடரணி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

தினமுரசு

# வடக்கில் ஊனமுற்றோர் வாழ்வு ஒளியின்றி - சுபீட்சமின்றி உள்ளது

## யார் கைகொடுத்து உதவுவார்கள்?

இன்று வடமாகாணம் போர் ஒய்வுக்கு பின்னரான சூழலில் மாகாண நிர்வாகம் இடம்பெற்றுவருகின்றது,

வடக்கின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப் பாணம், வவுனியா ஆகிய 5 மாவட்டங்களையும் கொண்டமைந்த இந்த நிர்வாகத்திற்கு மக்களின் ஏகோபித்த வாக்கு வல்லமையுடன் தலைமை நிர்வாகத்தை கைப்பற்றியவர் ஒய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் என்று யாவரும் அறிந்ததே.

சி.வி.விக்கி அவர்கள் பொறுப்பேற்பதற்கு முதல் இருந்து இன்றை வரை எமது வடக்கில் புரையோடிப் போய் உள்ளதும் - ஏனைய தனியாரால் முன்னெடுக்க முடியாததும் - அரச மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களால் முன்னெடுக்க முடியாது. கைவிடப்பட்ட திட்டமாக ஊனமுற்றோர் வாழ்வு பாதித்த விடயமாக உள்ளது.

இந்த போர்பாதித்த ஊனமுற்றோர் திட்டமானது வன்னிப்போர் உச்சக்கட்டத்தை அடைந்த போது பல ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்ததையும், காயமடைந்து, அவயவங்களை இழந்து எழுந்து நடக்கமுடியாத மக்களை இந்த நாடு மட்டுமல்ல சர்வதேசமும் உணர்ந்துள்ளது. அதனை விலாவாரியாக எடுத்து கூறியுமுள்ளது.

இந்த கொடிய யுத்தத்தில் சிறுவர், குழந்தைகள், கணவர், மனைவி மற்றும் பிற மானிடர் என பல வகையில் போர்ப்பாதிப்பின் பின்னரான ஊனமுற்றவர்கள் பலவாறாக இனம் காணப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கையில் உள்ள சகல அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் இதனுடன் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், பல்கலைக்கழக ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் என இவ் ஊனமுற்றோர் விடயத்தை கடந்த காலங்களில் விலாவாரியாக எடுத்துக் கூறிவிட்டனர்.

இன்று வடக்கில் மூன்று தசாப்த காலமாக இடம்பெற்று வந்த கொடிய போர் 2009 மே மாதம் 19 ஆம் திகதி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வடக்கில் போர் பாதிப்புக்குள்ளாகி எழுந்து நடக்கமுடியாத ஊனமுற்ற பல ஆயிரக்கணக்கான சிறுவர் முதல் முதியோர் வரை அடுத்த உலகம் தெரியாது. நான்கு சுவர்களுக் குள்ளும், கொட்டில்களிலும், குடிசைகளிலும், அனாதையில்லங் களி லும் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறபன விடங்களை வடக்கில் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பிரதேச செயலக சமூக சேவை பிரிவில் ஊனமுற்றோர், மாற்றுதிறனாளிகள், கண்தெரியாதவர்கள், ஒரு கையிழந்தவர், இரு கையிழந்தவர், இரு கையும் இருகால்களும் இழந்தவர், ஒரு கண்ணும் ஒரு காலும் இழந்தவர், இடுப்புக்கு கீழ் இயங்காதவர், மூளைநரம்பு பாதித்தவர், அடுத்தவேளை உணவுக்கு நிதியில்லாதவர், குழந்தைகளுக்கு போதுமான ஊட்டச்சத்து இல்லாது பாதித்த குழந்தைகள் என நீண்டபட்டியல்களை தயாரித்து உள்ளனர்.

இவ்வாறான பட்டியல்களை நான் வெளிநாட்டில் இருந்து வந்த ஒவ்வொரு பிரதேச செயலாகமாக சென்று பார்வையிட்ட போது ஏக்கமடைந்தேன் - பாதிப்படைந்தேன்.

இங்கு 95 வீதமான விபரங்கள் செயலுருப்பெற்று மாதாந்த பிரதேச செயலக கூட்டங்களில் இதன் எண்ணிக்கையை அதிகரித்து (update) மாற்றங்கள் செய்து வருவது மட்டுமே எங்களால் முடிகிறது என பிரதேச செயலர்கள், சிறுவர் மேம்பாட்டு அலுவலர்கள், சமூகசேவை அலுவலர்கள் கூறிவருகின்றனர்.

வடமாகாண சபை ஆரம்பித்து இதுவரை 176 இற்கும் மேற்பட்ட பிரேரணைகள் சமர்ப்பித்து விட்டனர். ஆனால் முதல்வர் விக்னேஸ்வரனும் அவரின் கீழ் உள்ள 31 சபை உறுப்பினர்களும் இணைந்து இதுவரை இவ்வாறு போர் பாதித்த - ஊனமுற்றவர்களுக்கு (மாற்றுத்திறனாளிகளுக்கு) ஏதாவது பிரேரணைகள் முன் வைத்தார்களா?

இல்லாவிடில் ஏதாவது உதவிகளை 5 மாவட்டங்களிலும் முன் வைத்தார்களா? இங்கு எதுவுமே நடக்காத பூச்சியதிட்டமே (zero base) என்னால் இனம் காணப்பட்டுள்ளது.

இதனைவிட வடக்கின் போர் பாதிப்பு குறித்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு சென்று பல்வேறு விபரங்களை சமர்ப்பித்து பல மில்லியன் டொலர்களை பெற்று வந்து தமது சொந்த நிதி போன்று வங்கி வைப்பு செய்து விட்டு மீளவும் வெளிநாடு சென்று நிதி திரட்ட ஆயத்தமாகின்றனர்.

இவர்களுக்கு வெளிநாட்டு புலம்பெயர் தமிழ் உறவுகள் ஏன் இவ் வாறு ஏமாந்து, ஏமாந்து உதவுகிறார்களோ தெரியவில்லை. இது தமிழர்களின் வரலாறு.

இங்கு நான் சொல்லவருகிறது யாதெனில் வடக்கின் முதல்வர் அவர்கள் நிர்வாகம் செய்தாரோ செய்யவில்லையோ எமது வடக்கு பிரதேசத்தில் பட்டியல்களாக நீண்டு செல்லும் போர்பாதித்த ஊனமுற்றவர்களுக்கு உதவவேண்டும்.

இவ்வாறு அடுத்த உலகம் தெரியாது இரண்டு சுவருக்குள் - இருட்டறையில் உள்ள மக்களை வெளிச்சத்துக்கு கொண்டு வர வேண்டும். இவ்வாறான மக்களுக்காவது அரசியலுக்கு அப்பால் உதவ முன்வரவேண்டும் என்பதே எனது தலையாய கோரிக்கையாகும்,

வடக்கு மாகாணத்திலும் சமூகசேவை அமைச்சு உள்ளது, மத்திய அரசிலும் சமூகசேவை அமைச்சு உள்ளது. இது ஏன் என புரியவில்லை. எனவே முதல்வர் அவர்களே வடக்கு முதல்வர் பதவியேற்பின் போது எடுத்த "வேல் ஆயுதத்திற்கு" மதிப்பளிக்க வேண்டுமாயின் ஒரு கணம் சிந்தித்து செயற்படுங்கள்.

ஊனமுற்றோர் வாழ்வில் மறுவாழ்வு ஏற்பட்டு "சுபீட்சம்" ஏற்பட துரிதமாக செயற்பட்டு நல்வாழ்வுக்கு மதிப்பளியுங்கள் இல்லாவிடில் மாகாண நிர்வாகத்தை விட்டு வெளியேறுங்கள்.

நன்றி.

கோயில் வீதி,
நல்லூர்.

பரா.செகரராஜசேகரன்.

06. முதலாம் எண்சட்டத்திலிருந்து இரண்டாம் எண்சட்டத்திலுள்ள எண்ணைக்கழிக்க வரும் விடையை எண்சட்டத்தில் குறிக்க



07. பைக்கற்றொன்றில் 7 சவர்க்கார கட்டிகளை அடைக்க முடியும். அவ்வாறான 756 சவர்க்கார கட்டிகளை அடைக்க தேவையான பைக்கற்றுக்களின் எண்ணிக்கையை காண்க? ..........................

08.



நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் பின்னமாக் தருக.......................................
(100 கட்டங்கள் பொருத்தமாக உள்ளன)

09. சமனின் நிறை 22kg 400g ஆகும். அவனது அப்பா அவனை விட 3 மடங்கு பாரமானவர் அப்பாவின் நிறையை காணுங்கள்? ..........................

10. இரு எள்ளுருண்டைப் பைக்கற்றுக்களில் ஒன்றில் 472 எள்ளுருண்டைகளும் மற்றையதில் 512 எள்ளுருண்டைகளும் உள்ளன?

01. இருநபர்களுக்கிடையில் சம எண்ணிக்கையான எள்ளுருண்டைகளை வழங்க வேண்டும் எனின் கூடுதலாக உள்ள பைக்கற்றில் இருந்து குறைவாக உள்ள பைக்கற்றுக்கள் எத்தனை எள்ளுருண்டைகளை இட வேண்டும்? ..........................

11. கூட்டுக $\frac{3}{8} + \frac{1}{2} = \square$

12.



இவ்வுருவில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது? ..........................

13. 3மணித்தியாலயத்தில் 90 km பயணிக்கும் பேருந்து ஒன்று $2\frac{1}{2}$ மணித்தியாலயத்தில் எத்தனை km தூரம் பயணிக்கும்? ..........................

(15) வானில் பறக்கும் பட்டம் நானாவேன் என்ற கருப்பொருளில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும் இலக்கணத்தொடர்பு எழுத்துக்கூட்டல் என்பன சரியாக அமைய வேண்டும்.

01..........................
02..........................
03..........................

14. கொக்கு,முதலை,சிங்கம் என்னும் பிராணிகளை எந்த வகையில் ஒரே தொகுதியில் கூறமுடியும்
01. இனம் பெருக்கும் வகையில்
02. உண்ணும் உணவு வகையில்
03. அங்கும்,இங்கும் செல்லும் முறையில்

15. மழலை மொழி என்பது
01. ஆதிவாசிகள் பேசுகின்ற மொழி
02. வேற்றுக்கிரகத்தவர் பேசுகின்ற மொழி
03. குழந்தைகள் பேசுகின்ற மொழி

16. உரோமன் எண் 5ஐ எழுதுவதற்கு 2 தீக்குச்சிகளும் 6ஐ எழுதுவதற்கு 3 தீக்குச்சிகளும் பயன்படுத்தப்பட்டன. இலக்கம் 9 ஐ எழுதுவதற்கு தேவையான தீக்குச்சிகள் எத்தனை?
01) 6 02) 3 03) 4

இப் பயிற்சி வினாக்களின் விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



(01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

நாம் கல்விச்சுற்றுலா சென்ற வேளை அங்கு போயிருந்தோம். தூரத்தில் நின்று பார்த்தபோது ஒரு பெரிய சிங்கம் படுத்திருப்பது போலக்காட்சி அளித்தது. அருகிலே சென்ற போதுதான். உண்மையான அமைப்பைக் கண்டு கொண்டோம். இருவராக மலையில் ஏறினோம். கோட்டை தெரிந்தது. அக்கோட்டையைச் சுற்றி அழிபாடு அடைந்த நிலையில் அகழிகளும் தென்பட்டன.

01) இப்பந்தியில் அங்கு என்ற சொல்லால் குறிப்பிட்ட இடம் எது?..........................
02) அரி என்ற சொல்லுக்குப் பொருத்தமான இன்னுமொரு சொல்லை தருக?..........................
03) பந்தியில் இடம்பெற்றுள்ள உவமானத்தை எழுதுக?..........................
04) ஏறினோம் என்ற சொல்லின் நிகழ்கால சொல்லை தருக?
05) அண்மையிலே என்ற சொல்லுக்கான எதிர்ச்சொல்லை எழுதுக?
06) கோட்டையைச்சுற்றி உள்ள ஆழமான நீர்நிலை என்பதன் தனிச்சொல்லை தருக?..........................

(02) இடைவெளி நிரப்புக.

01) .......................... ஒருவருக்குச் சிறந்த நண்பர்களாகும். நல்ல நண்பனைப் போல நல்ல புத்தகமும் எமக்கு.......................... புகட்டும்.
02) நன்றிக்காகத் தம்மை அர்ப்பணம் செய்தவர்கள்.......................... ஏதுலைவன் ஆவார்கள்.

(03) தனிச்சொல்லை தருக.

01) கிராமிய மக்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பா..........................
ஒரு நாட்டில் வாழும் குடிமக்கள்..........................

(04) இடைவெளிநிரப்புக.

01) ஆட்டுக்கு மந்தை போல வைக்கோலுக்கு ..........................
02) மானுக்கு பிணை போல யானைக்கு ..........................

(05) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக.

01) கவர்ச்சியாக / வேண்டும் / செய்திகளின் / தலைப்பு / அமைய
..........................
02) பயன்தூக்கி / நனி / நன்றியைப் / இனிது / வாழ்தல்
..........................

(06) இடைவெளிக்கு பொருத்தமான ஒலிவேறுபாட்டு சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

01) காட்டில் வாழ்வது .......................... கல்வியை நன்றாய் .......................... (அறி, அரி)
02) பாரம் தூக்குவது .......................... சோற்றுடன் சேர்த்து உண்ணுவது .......................... (கறி, கரி)
03) .......................... ஆட்டும் நாய் .......................... ஓங்குவான் வீரன் (வாளை, வாலை)

(07) பின்வரும் சிங்களத் தொடருக்கான கருத்தினை தமிழில் எழுதுக

01) மட்ட கெதர யன்ன ஓனே ..........................
02) என்ன தே பொன்ன ..........................

(08) சிங்களத்தில் எழுதும் விதத்தில் தமிழில் எழுதுக

01) புத்தகத்தை எடு..........................
02) முத்திரை வாங்குவது எங்கே? ..........................

**(09) கருத்தினை தமிழில் எழுதுக.**

01. please will you bring my book ..............................

02. I love my srilanka ..............................

**(10). கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**

01. நீ எங்கே போகிறாய்?..............................

02. இது எனது புத்தகம்..............................

**(11) பின்வரும் உபகரணங்கள் எவ்வகையான பயன்பாட்டுக்கு உகந்தவை என்பதை தெரிவு செய்து அதன் இலக்கத்தை எழுதுக.**




01. வயல் வேலையின் போது நிலத்தை கொத்தி கிளறுவதற்கு உதவும் ..............................

02. சைக்கிள் வண்டியின் சுரைகளை இறுக்குவதற்கும், கழற்றுவதற்கும் உதவும் ..............................

03. சித்திரங்களை மரப்பலகையில் வரைவதற்கு உதவும் ..............................

04. சுவர்களின் உயரத்தை கணிக்க உதவும் ..............................

05. உளி ஒன்றை பயன்படுத்தும் போது தேவைப்படும் ..............................

**(12) வினாக்களுக்கு விடை தருக.**

01. ஒலிம்பிக் வளையத்தில் நீலநிற வளையம் குறிப்பது எந்த கண்டமாகும்? ..............................

02. முகமூடிகளுக்கு பிரசித்தி பெற்ற இடம் எது?..............................

03. மிகப்பெரிய முட்டையிடும் பறவை எது?..............................

**(13) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. உமது பிரதேசத்தில் மின்கம்பமொன்று பாதையில் விழுந்து கிடப்பதை அறிவிப்பதற்கான தொலைபேசி இலக்கம்?

1) 1929  2) 119  3) 1987  4) 1897

02. பாதசாரிகள் பாதையை கடப்பதற்கான சந்தர்ப்பத்தில் பொலிசாரின் சமிக்ஞை பின்வருவனவற்றுள் எது?




03. உடலிலே கல்சியம் குறைவான ஒருவருக்கு ஏற்படுவது?

1) பல், எலும்பு பாதிப்படைதல்  2) கண்பார்வை பாதிப்படைதல்
3) முரசு பாதிப்படைதல்  4) உடல் வளர்ச்சி குறைதல்

04. நாய் தனது குட்டியை கௌவுவது

1) கழுத்துப்பகுதியை  2) முதுகுப்பகுதியை  3) தலைப்பகுதியை  4) காதுப்பகுதியை

05. மணலில் புதைத்து வைப்பதன் மூலம் நீண்டகாலம் பேணக்கூடியது

1) பலாவித்து தேங்காய்  2) பலாவித்து இஞ்சி
3) தேங்காய் - பாக்கு  4) எலுமிச்சை - பாக்கு

06. நீரிலே சில நாட்களுக்கு ஊற வைத்தபின் நடப்படும் வித்து

1) தோடைவித்து  2) மஞ்சாடி  3) வீரலுவித்து  4) தேங்காய்வித்து

07. யூரியா என்னும் செயற்கை பசளை தயாரிக்கப்படுவது?

1) கடல் உப்பிலிருந்து  2) தேங்காய்எண்ணெயிலிருந்து
3) மண்ணெண்ணெயிலிருந்து  4) மணல் மண்ணிலிருந்து



08. நீர் நிறைந்த கண்ணாடி குவளையினுள் இடப்பட்ட பென்சில் காட்சி தரும் அமைப்பு பின்வருவனவற்றுள் எது?




09. பின்வருவனவற்றுள் பாலூட்டும் முலையூட்டி அல்லாதது எது?

1) எறும்புண்ணி  2) இராமபாணம்  3) வௌவால்  4) திமிங்கலம்

10.



இச்செயற்பாட்டில் மின்னோட்டம் நிகழும் சந்தர்ப்பத்தில் இரும்பாணி குண்டூசிகளைக் கவரக்காரணம்

1) இரும்பாணியின் ஈர்ப்புச்சக்தியினால்  2) மின்கலத்தின் மின் சக்தியினால்
3) மின்காந்த ஈர்ப்பு சக்தியினால்  4) செப்புக்கம்பியின் ஈர்ப்பு சக்தியினால்

11. சூரிய கிரகணம் ஏற்படுவது

1) பௌர்ணமி தினத்தில்  2) நடு நிசிப்பொழுதில்  3) அட்டமிதினத்தில்  4) அமாவாசை தினத்தில்

12. சூறாவளி ஏற்படும் போது பாதுகாப்பிற்காக செய்ய வேண்டியது

1) பெரிய மரமொன்றின் கீழ் நிற்றல்  2) திறந்தவெளிக்கு ஓடிவிடுதல்
3) மலையொன்றின் மீது ஏறுதல்  4) பலமான கூரையொன்றை உருவாக்கி வீட்டினுள் இருத்தல்

13. பின்வருவனவற்றுள் பாதுகாப்பான சந்தர்ப்பம் எது?

1) சூறாவளி வீசும் போது கடற்கரைப்பக்கம் செல்லல்
2) மின்னல் தாக்கத்தின் போது பேருந்தில் பயணித்தல்
3) மின்னல் தாக்கம் ஏற்படும் போது திறந்த வெளிக்கு செல்லல்
4) பலத்த காற்று வீசும் போது மலைமேல் ஏறுதல்

14.



இக்குறியீட்டினால் கருதப்படுவது அல்லாதது

1) ஊனமுற்றோர்  2) அங்கவீனர்
3) வலது குறைந்தோர்  4) பிணியாளர்

15.



இக்குறியீடு குறிப்பது

1) வழுக்கும் கார் வண்டி  2) முன்னால் பாதை வழுக்கும்
3) கார் வண்டி வழுக்க கூடியது  4) பாதை வழுக்கும்

**(14) கணித வினாக்களுக்கு விடை தருக.**

01. நிலாவுக்கு வயது 4 அவளது தம்பியின் வயது நிலாவின் வயதின் அரைவாசியாகும். எனின் நிலாவுக்கு 10 வயதாகும். போது அவளது தம்பிக்கு எத்தனை வயதாகும்? ..............................

02. பத்தாயிரத்து நூறு என்பதை இலக்கத்தில் எழுதுக..............................

03. இடைவெளி நிரப்புக  01) 10 + .... = 3 + 3 = 4  02. 3x4 = ....+ 5 = 9

04.



கடிகார முகத்தில் காட்டப்பட்டுள்ள பிற்பகல் நேரத்தை மணித்தியால கடிகாரத்தில் குறித்து காட்டுக?

05.




செவ்வக வடிவமான இப்பாத்திரத்தின் சுற்றளவை சென்ரிமீற்றரில் தருக?
..............................

# இந்து நாகரீக பாடத்திற்கு ஆசிரியர் இல்லை

## மாணவர்களின் கல்வி பாதிப்பு

(கொழும்பு)

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள ஏழாலை மகாவித்தியாலயத்தில் இந்து நாகரிக பாடத்தினை க.பொ.த உயர்தர வகுப்பில் கற்பிப்பதற்கு கடந்த ஒருவருடமாக ஆசிரியர் நியமிக்கப்படாமையினால் மாணவர்களின் கல்வி பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதாக பெற்றோரும், மாணவர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் மேற்படி பாடத்தைக் கற்பித்து வந்த ஆசிரியை வன்னியிலிருந்து தற்காலிக இணைப்பில் வந்தவர் எனவும், இவர் இந்த வருடம் ஜனவரி முதல் வன்னிப் பாடசாலைக்குச் சென்றுள்ளார் எனவும், இதனைத் தொடர்ந்தே மேற்படி பாடத்திற்கு ஆசிரியர் இல்லாமல் போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆசிரியர் வெற்றிடம் தொடர்பில் அதிபர் ஆசிரிய ஆலோசகர் ஆகியோர் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தபோதிலும், இதுவரை ஆசிரியர் எவரும் மேற்படி பாடசாலைக்கு நியமிக்கப்படவில்லையெனவும் இதனால் குறித்த பாடம் கற்பிக்கப்படாமலே இருந்து வருவதாகவும், இது மாணவர்களினது கல்வியில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தி வருவதாகவும் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி மாணவர்கள் 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி பொருத்தமான ஆசிரியர் ஒருவரை நியமிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிபர் ஆசிரியர் பெற்றோர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (06)

# சிறையில் வாடும் கைதிகளை விடுவிக்க சட்டமா அதிபர் விரைந்து செயற்படவேண்டும்

## நாடாளுமன்ற குழு வாதத்தில் அலன்ரின் உருக்கம்



எமது நாட்டில் பலர் அரசியற் கைதிகளாக சிறைகளில் மிக நீண்டகாலமாக தண்டனையை அனுபவித்து வருகின்றார்கள்.

இவர்களுடைய விடுதலைக்கான ஏற்பாடுகளை நீதி அமைச்சும், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சும் மேற்கொண்டு கைதிகளுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும்.

இவ்வாறு ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

நாடாளுமன்ற குழு விவாதத்தில் கலந்துகொண்ட சில்வேஸ்திரி அலன்ரின் மேலும் தெரிவிக்கையில்,

எமது சூழலில் பலர் அரசியற் கைதிகளாக சிறைகளில் மிக நீண்டகாலமாக தண்டனையை அனுபவித்து வருகின்றார்கள்.

இவர்களுடைய விடுதலைக்கான ஏற்பாடுகளை நீதி அமைச்சும் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சும் செய்ய வேண்டும்.

யுத்தம் முடிந்த பின்னர் பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்தோரில் 11000 பேருக்கு மேல் விடுதலை செய்யப்பட்டுள்ளனா.

தற்போது இவர்கள் சமூக வாழ்வில் மீண்டும் கலந்துள்ளனர். இந்த நிலையை உருவாக்கிய அரசிற்கு நான் நன்றி சொல்லுகின்றேன்.

இதைப்போல இன்னும் சிறைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியற் கைதிகளை மீண்டும் சமூக வாழ்வில் இணைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேணடும் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இத்தகைய கைதிகளைத் தேடி நீண்ட தொலைவில் இருந்து இவர்களின் சொந்தங்கள், உறவுகள், குழந்தைகள், தாய், தந்தையர் என பல நூற்றுக்கணக்கானோர் அலைந்து திரிகின்றனர்.

எனவே இக் கைதிகள் மத்து வழக்குத் தொடரப்பட வேண்டியிருப்பதால் சட்டமா அதிபர் அதற்கான அனுமதியை வழங்கி வழக்கைத் தொடர்ந்து அவர்களுக்கு மறுவாழ்வை ஏற்படுத்த முன்வர வேண்டும் இப்படி வழக் கைத் தொடர்ந்தால் இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடாபான விசாரணைகள் துரிதமாக நடைபெற்று தீர்ப்பைப் பெற்று வெளியேறுவர்.

மேன்மைதங்கிய ஜனாதிபதி தமிழக மீனவர் ஐவரை விடுவித்துள்ளார். இதைப்போல எமது அரசியற் கைதிகளையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகத்தில் வாழ்வின் எழுச்சி சமுர்த்தி வங்கி மற்றும் பிரதேச செயலகம் என்பன இணைந்து பிரதேச செயலக வளாகத்திலுள்ள பிள்ளையார் கோயிலில் விசேட பிரார்த்தனை நிகழ்வு நடைபெற்றது. பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அம்பலம் ரவீந்திரதாசன் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்சுரேந்திரநாதன், உதவிப் பிரதேச செயலர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# சமூக சேவைத்திணைக்களத்தால் பயனாளிகளுக்கு கொடுப்பனவு

கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் மாதாந்த சிகிச்சைக்கு பிரத்தியேக வாகனத்தில் செல்லும் 5 பயனாளிகள் போக்குவரத்து கொடுப்பனவுக்கு தெரிவாகியுள்ளனர்.

வடக்கு சமூகசேவைத் திணைக்களத்தினால் யுனிசெவ் திட்டத்தின் கீழ் தலா 1500 ரூபா வீதம் 5 பயனாளிகளுக்கு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதில் தெரிவான பயனாளிகளான த.ஜெயா (துன்னாலை வடக்கு, க.குமுதினி (கரவெட்டி கிழக்கு), அ.யோகேந்திரன் (கம்பர்மலை), ச.வாணிஸ்ரீ (கரவெட்டி மத்தி), க.கதிர்காமலிங்கம் (தச்சன்தோப்பு) ஆகியோரை கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (18)

# ரசிகர்களுக்கு விருந்தான இசைவேள்வி

தொல்லை வினை தீர்க்கும் நல்லைக்கந்தன் வீதியிலே அமைந்துள்ள ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் மூன்று நாட்களாக தெய்வீக இசைமாரி பொழிந்தது. ரசிகர்களாகிய நாம் இன்ப வெள்ளத்தில் மிதந்தோம். அந்த இசை நிகழ்வு பற்றி வர்ணிக்க வார்த்தைகளே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இது எனது எண்ணத்தில் உதித்த ஆனந்த உத்வேகம்.

ஆமாம், எடுத்துரைக்க முடியாத அற்புத நிகழ்ச்சி அது.



அகில இலங்கைக் கம்பன் கழகம் கடந்த நவம்பர் 15, 16, 17 ஆம் திகதிகளின். "ஸ்ரீராம நாம கானா மிர்தம்" என்று ஓர் இசை நிகழ்வை யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்திருந்தது. நவம்பர் 14 ஆம் திகதி மாலை வேளையில் நல்லூர் கம்பன் கோட்ட மண்டபத்தில் நம் நாட்டு, தமிழ்நாட்டு இசைக் கலைஞர்களின் ஒன்றிணைந்த ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்தின கீர்த்தனை இசையுடன் பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களின் மங்கள இசையும் சேர்ந்து வேள்வி நிகழ்வுகள் ஆரம்பமாயின.

ஆரம்ப நிகழ்வு ஆனந்தமாக நிறைவுற மறுநாள் முதலாக சனி, ஞாயிறு, திங்கள் மூன்று நாட்களும் நல்லூரில் கானாமிர்த இசை மாரி பொழிந்தது. மண்டபம் நிறைந்த ரசிகர்கள் மத்தியில் சனிக்கிழமை மாலை இசைவேள்வி இனிமையாகத் தொடங்கியது.

இந்த அருமையான நிகழ்ச்சிக்கு வயலின் வாசித்த இசை மேதை திரு.ஜே.ஜே.திலீப் (தமிழ்நாடு) பக்குவமாக வாசித்ததோடு ஒவ்வொரு பாடலும் உள்ளத்தில் பதிந்து உவகையை அளிக்குமாறு செய்து க்ச்சேரியைக்களை கட்டச் செய்தார். சபையோரின் கரகோஷம் வானைப் பிளந்தது.

சாநதன் கோபாலனின் இனிய தீங்குரல் மண்டபத்திலிருந்த அனைத்து ரசிகர்களின் காதுகளில் தேனாறாகப் பாய்ந்தது. ஒரு வண்டு எப்படி தேன் குடித்து மது மயக்கத்தில் கிறங்கிப்போய் இருக்குமோ அந்த நிலைதான் மண்டபத்து ரசிகர்களுக்கும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக நாதவாணி ஸ்ரீமதி பம்பாய் ஜெயஸ்ரீ அவர்களின் இசைக கச்சேரி இடம்பெற்றது. அவர் நாத மழைபொழிந்த வேளையில கீத இசையில் மெய்மறந்து ரசித்த ரசிகர்களின் கூட்டம் அன்று மண்டபத்தை நிறைததிருந்தது.

இருக்க இடமின்றி இரசிகர்கள் அவஸ்தைப்பட்டதைக் கண்ட விழா ஏற்பாட்டாளர்கள் இசைக்கச்சேரி நடக்கும் மேடைக்கு அருகாக (மாணவிகளை) ரசிகர்களை அமர வைத்தமையை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். அத்தனை பெரும் எண்ணிக்கையான ரசிகர்கள் அன்று திரளாக வந்திருந்தனர். அவ்வளவு பேரும் சங்கீத ரசிகர்கள.

மூன்றாம் நாள் இசை நிகழ்ச்சி எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்திருந்தது. இனிக்கும் இன்பரசம் காதுகளை நிறைத்தது. இன்னிசைக் கச்சேரியை வழங்கியவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த பத்மஸ்ரீ கத்ரி கோபால்நாத் அவர்களாவர்.

தமக்கேயுரித்தான இனிய புன்முறுவல் பூத்தமுகம். குங்குமப் பொட்டோடு துலங்கிய அழகிய நெற்றி. அனைவரையும் கவர்ந்திழுக்கும் காந்தக் கணகள். இதுதான் அன்று இசை மழை பொழிந்த கலைஞரின் இனிய தோற்றம் மேடையில் வந்து அமர்ந்த விதமும் சக்ஸபோன் வாத்தியத்தை வாசித்த லாவகமும் இப்பொழுதும் என் கண்முன்னே அழகாகக் காட்சியளிக்கின்றது.

இந்த இசைவேள்வி நடைபெற்ற மூன்று நாடகளிலும் மிருதங்கம் வாசிதத தமிழ்நாடு டெல்லி சாய்ராம் அவர்களையும், கஞ்சிரா வாசித்த தமிழ்நாடு அனுருத் ஆத்ரேயா அவர்களையும் மறக்கவே முடியாது. ஒவ்வொரு பாட் டுக்கும் அநாயாசமாக பக்க வாத்தியம் இசைத்துக் கச்சேரியைக் களைகட்டச் செய்திருந்தனர்.

மூன்று நாட்களிலும் நடைபெற்ற 'தனியார்வத்தனம்' தனித்து வமானது. மிருதங்க இசையின் ஓசை நயம் என்னவென்று அன்று தான் எலலோருக்கும் புரிந் தது. கஞ்சிரா இசையும் சேர்ந்து ஒலித்த நாதவெள்ளம் அனை வரையும் நனைத்தது. சபை யோரின் கரகோஷம் மண்டபத் தையே

ஓர் கண்ணோட்டம்

அதிர வைத்தது. சபாஷ்! பலே!!

இந்த மாதிரியான இசை நிகழ்ச்சியை யாழ். மக்களுக்கு வழங்கிய கம்பவாருதி இ.ஜெயராஜ் பாராட்டுக்குரியவர். தன்னல மற்ற 'அவருடைய பணி யாழ்ப் பாண வாசிகளுக்கு மிகுந்த மன மகிழ்ச்சியைத் தந்ததெனில் மிகையாகாது.

இத்தகைய நிகழ்வை வழங்கிய கம்பன் கழகத்தினருக்கு ஆயிரம் கோடி நன்றிகள் உரித்தா கட்டும்! வணக்கம்.

தொகுப்பு

'செந்தமிழ்திலகம்'
தெய்வத்தமிழ்ச்சுடர்
கலாபூஷணம்
இரா.சையா ஸ்ரீதரன்

# காஷ்மீர் பிரச்சினை தொடர்பில் ஒபாமா ஆராயவேண்டும்

## பாக். பிரதமர் கோரிக்கை



இந்திய பயணத்தின்போது அமெரிக்க அதிபர் ஒபாமா, காஷ்மீர் விவகாரம் குறித்து ஆலோசிக்க வேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னதாக கடந்த வெள்ளிக்கிழமையன்று குடியரசு தின விழாவில் தலைமை விருந்தினராக பங்கேற்க இந்தியாவுக்கு வருமாறு, அமெரிக்க் அதிபர் பராக் ஒபாமாவுக்கு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில், பாகிஸ்தான் பிரதமர் நாவாஷ் ஷெரீப்பை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய அமெரிக்க அதிபர் ஒபாமா, தனது இந்திய சுற்றுப்பயணம் குறித்து தகவலை தெரிவித்தார்.

இது தொடர்பாக பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜனவரியில் இந்திய குடியரசு தின விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொள்ள இந்தியா செல்லவிருப்பதை செரீப்பிடம் தெரிவித்தார். 2013-ல் வோஷிங்டன் சென்றிருந்த போது பாகிஸதானுக்கு வருமாறு ஒபாமாவுக்கு அழைப்பு விடுத்திருந்ததை நினைவுகூர்ந்த நவாஷ் ஷெரீப், பாகிஸ்தான் மக்கள் அமெரிக்க ஜனாதிபதியை வரவேற்க ஆர்வமாக இருப்பதாக ஒபாமாவிடம் தெரிவித்தார். அதற்கு ஒபாமாவும், பாகிஸ்தானில் இயல்பு நிலை திரும்பியவுடன் அங்கு நிச்சயம் வருவேன் எனக் கூறினார்.

மேலும், இரு தரப்பு பேச்சு வார்த்தையை மீண்டும் தொடங்க பாகிஸ்தான் எப்போதும் தயாராகவே இருப்பதாகவும் ஆனால் இந்தியா பாகிஸ்தானுடன் நட்பு பாராட்ட தயங்குவதாகவும் கூறினார். எல்லையில் அத்துமீறி தாக்குதல் நடத்தி அப்பாவி மக்கள் உயிரை பறிப்பது, தூதர்கள் மட்ட பேச்சுவார்த்தையை இரத்து செய்வது போன்ற துரதிர்ஷ்டவசமான செயல்களில் இந்தியா ஈடுபடுவதாகவும் ஷெரீப் குற்றம் சாட்டினார். இந்தியா - பாகிஸ்தான் இடையே இணக்கமான சூழலை உருவாக்கும் பொறுப்பு இந்தியாவிடம் தான் உள்ளது என்றும் நவாஷ் ஷெரீப் தெரிவித்தார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# பிரான்ஸை தாக்குவோம் ஐ.எஸ்.ஐ.எஸ். மிரட்டல்




பிரான்ஸ் மீது தாக்குதல் நடத்தப்போவதாக ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் காணொளி ஒன்றின் மூலம் மிரட்டல் விடுத்துள்ளனர்.

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ்-இணை ஒழித்துக்கட்ட அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா, கனடா, ஜேர்மனி உள்ளிட்ட சர்வதேச நாடுகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதனால் ஆத்திரமடைந்த ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் தங்களை எதிர்க்கும் நாடுகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தொடர்ந்து தலைத் துண்டிப்பை அரங்கேற்றி வருகின்றனர்.

இந்நிலையில் பிரான்ஸ் மீது கடும் தாக்குதலை நடத்தவுள்ளதாக ஐ.எஸ்.ஐ.எஸ் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

மேலும் தங்களது கடவுச்சீட்டை எரித்த தீவிரவாதிகள் முகத்தை மூடாமல் துணிச்சலுடன் இந்த காணொளியில் பேசியுள்ளனர்.

# ரஷ்யாவுக்கு எச்சரிக்கை

உக்ரெயின் விடயத்தில் ரஷ்யா தொடர்ந்தும் குற்றமிழைத்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் உதவி ஜனாதிபதி ஜோ பெய்டன் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது உக்ரெயினில் பதற்றமான சூழ்நிலை காணப்படுகின்ற நிலையில், ஜோ பெய்டன் அந்த நாட்டுக்கான விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார்.

நேற்றுமுன்தினம் அவர் உக்ரெயின் ஜனாதிபதி பெற்றோ பொறசென்கோவை சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது, உக்ரெயினில் தளம்பலை ஏற்படுத்த ரஷ்யா தொடர்ந்தும் முயற்சிப்பதாக குற்றம் சுமத்தினார்.

ரஷ்யா தமது போக்கை மாற்றிக் கொள்ள தவறின், சர்வதேச நாடுகளில் இருந்து மேலும் தனிமைப்படுத்தப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# இப்படியெல்லாம் ஆசை வருமா





ரஷ்யாவைச் சேர்ந்த ஜென்யா பொலோடோவ் (வயது -26) பெரிய முயற்சிகளுக்குப் பிறகு, பிளாட்டிபஸ் போல தன் முகத்தை மாற்றிக்கொண்டு தன்னுடைய இலட்சியத்தை அடைந்துவிட்டார். முகத்தில் உள்ள காது, உதடு, மூக்கு போன்ற எட்டுப் பகுதிகளை மாற்றி, பிளாட்டிபஸ் முகத்தைப் பெற்றிருக்கிறார். இது குறித்து அவர் தெரிவித்ததாவது உருவத்தை மாற்றும் எண்ணம் பத்து வயதிலேயே உருவாகி விட்டது.

பிளாட்டிபஸ் என்றால் எனக்கு விருப்பம் அதிகம். அதன் தட்டையான அலகு என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. அதனால் சில பல வேலைகள் செய்து, உதடுகளை முதலில் மாற்றிக்கொண்டேன். பிறகு படிப்படியாக மற்ற உறுப்புகளையும் மாற்றி, முழுமையான பிளாட்டிபஸ் மனிதனாக மாறிவிட்டேன். என் இலட்சியம் நிறைவேறிய மகிழ்ச்சியில் திளைக்கிறேன் என்கிறார்.

# எபோலா அச்சுறுத்தல்



(டில்லி)

எபோலா போன்ற கொடிய வைரஸ் நோய்களை அடையாளம் காண இந்தியா முழுவதிலும் உள்ள சர்வதேச விமான நிலையங்களில் 24 புதிய தெர்மல் ஸ்கேனர்களை பொருத்த மத்திய அரசின் நலத்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

ஏற்கனவே, இதுபோன்ற 18 கருவிகள் நடைமுறையில் உள்ளன. இருப்பினும், பயணிகளின் எண்ணிக்கை மற்றும் விமான நிலையங்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளை பரிசோதனை செய்ய (குறிப்பாக ஆபிரிக்க நாடுகளில் இருந்து வரும் பயணிகள்) இந்த தெர்மல் ஸ்கேனர்கள் பொருத்தப்படுகின்றன.

தற்போது இருக்கும் 18 ஸ்கேனர்களின் மூலம் இன்று வரை சுமார் 33 ஆயிரம் பயணிகள் சோதனை செய்யப்பட்டுள்ளனர்.

## பெண்நிருபர்களுக்கு ஆயுள்தண்டனை

சீனாவில் அரசு ஆவணங்களை திருடிய பெண் பத்திரிகையாளர் ஒருவருக்கு ஆ[illegible] தண்டனை விதிக்கப்படவுள்ளது.

சீனாவைச் சேர்ந்த காவ் யு (வயது-70) என்ற பெண் நிருபர் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய தலைமை இரகசிய ஆவணங்களை திருடியதற்காக கடந்த ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டார். கைதான 2 வாரங்களுக்கு பிறகு தொலைக்காட்சி பேட்டியில் இவர் தனது குற்றங்களை ஒப்புகொண்டார்.

# கடலுக்கு அடியில் நவீன நகரம் கட்டுகிறது ஜப்பான் நிறுவனம்



கடந்த 2012ஆம் ஆண்டில் ஜப்பானைச் சேர்ந்த ஒபயாசி கார்ப்பரேசன் என்ற கட்டுமான நிறுவனம் விண்வெளியில் கட்டடம் கட்டி அங்கு சுற்றுலா பயணிகளை அழைத்து சென்று தங்க வைக்கப்போவதாக அறிவித்தது.

இன்னும் 40 ஆண்டுகளில் அதற்கான முயற்சியை மேற்கொண்டு திட்டத்தை நிறைவேற்றப் போவதாக அறிவித்தது.

இந்த நிலையில் ஜப்பான் ஷிம்சு என்ற மற்றொரு கட்டுமான நிறுவனம் கடலுக்கு அடியில் அதிநவீன நகரத்தை கட்டப் போவதாக அறிவித்துள்ளது.

1500 அடி அகலத்தில் வட்ட வடிவிலான கூண்டு அமைக்கப் படுகிறது.

அதற்குள் வீடுகள், ஹோட்டல்கள், வர்த்தக நிறுவனங்கள் அமைக்கப்படுகின்றன. இங்கு 5 ஆயிரம் பேர் தங்கும் வகையில் வடிவமைக்கப்படுகிறது. இதற்கு அட்லாண்டிஸ் என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த ஆழ்கடல் அதிநவீன நகரம் கட்ட ரூ. 1 இலட்சத்து 50 ஆயிரம் கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஆழ்கடலில் 4 ஆயிரம் மீற்றர் ஆழத்தில் உருவாக்கப்படவுள்ளது.

இது வருகிற 2030ஆம் ஆண்டுக்குள் அதிநவீன தொழில நுட்பத்துடன் கட்டப்படும் என ஷிம்சு கட்டுமான நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# தமிழக மீனவர்கள் பிரச்சினை; மோடியிடம் விஜய் வலியுறுத்து





(சென்னை)

தமிழக மீனவர்களின் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு நடிகர் விஜய், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுதலை செய்வதற்கு பிரதமர் மோடி முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு விஜய் தனது நன்றிகளை தெரிவித்துள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மீனவர்களின் விடுதலையால், அவர்களின் குடும்பத்தினர் மாத்திரமல்லாது, தமிழகமே மகிழ்ச்சியில் உள்ளதாக தனது அறிக்கையில் விஜய் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, எதிர்வரும் காலங்களில் தமிழக மீனவர்கள் அச்சமின்றி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நரேந்திர மோடி எடுக்க வேண்டுமெனவும் நடிகர் விஜய் கோரியுள்ளார்.

இதேவேளை, மீனவர்கள் விவகாரம் தொடர்பான பேச்சு வார்த்தைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், இந்திய மீனவர்கள் தமது கடற்பரப்பிற்குள் மாத்திரமே மீன்பிடியில் ஈடுபட வேண்டுமெனவும் சுஷ்மா வலியுறுத்தியுள்ளார்.

# 50 கிலோமீற்றர் வீதிகள் அடுத்த வருடம் மீள்புனரமைப்பு

## பொறியியல் ஆலோசகர் டிலான் தெரிவிப்பு

வடமாகாணத்தில் 2015 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சபைக்குட்பட்ட 50 கிலோ மீற்றர் வீதிகளை மீள்புனரமைப்பு செய்ய அரசு முன்மொழிந்துள்ளது.

எனவே வடக்கில் உள்ள 34 சபைகளின் தலைவர், செயலாளர் இணைந்து வீதி வலயமைப்பில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட 50 கிலோமீற்றர் வீதிகளுக்குமென நில வரைபடங்கள், மதிப்பீடுகள் திட்டங்கள் உட்பட 5 ஆவணங்களை ஒவ்வொரு வீதிக்கும் உடன் தயார் செய்து கொள்ளுங்கள்.

உள்ளூர் ஆளுகை நிறுவனத்தின் பொறியியல் ஆலோசகர் டிலான் பெர்னான் டோபிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைச் செயலாளர்களுக்கான அறிவுறுத்தல் கற்கை நெறி யாழ்.நூலகத்தில் இரு நாட்கள் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட டிலான் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபை வீதி, மாகாண சபைக் குட்பட்ட வீதி அபிவிருத்தி திணைக்கள வீதி, பிரதேச சபை மாநகரசபை, மாநகரசபை வீதி என பாகுபடுத்தப்பட்டுள்ளது.

இதில் உள்ளூராட்சி சபைக்குட்பட்ட வீதிகள் 90 வீதமானவை மீள்புனரமைப்பு செய்யப்படவில்லையென குற்றம் சுமத்தப்படுகிறது.

எனவே அடுத்த வருடம் அரசாங்கம் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைக்கும் 50 கிலோ மீற்றர் முன்னுரிமைப்படுத்தப்பட்ட வீதிகளை புனரமைப்பு செய்ய முன் வந்துள்ளது.

இதற்கான திட்டங்களை தயார நிலையில் வைக்குமாறு தலைவர் செயலாளர்களை கோரியுள்ளேன். திடீரென்று அரசு திட்டங்களை கோரும்போது முன்னுரிமை அடிப்படையில் வழங்க கூடியதாக இருக்க வேண்டும்.

இவ்விடயத்தில் உள்ளூராட்சி சபைகளின் ஆணையாளர் தலைவர், செயலாளர் முனைப்புடன் செயற்பட வேண்டும.

மேலும் பென்பெக்ட் திட்டத்தில் 960 பக்கங்கள் உள்ளன. இதில் உள்ள ஒவ்வொரு பக்கமும் உள்ளூராட்சியை மேம்படுத்தி அதற்கூடாக மக்களின் அதிஉயர் சேவை இடம்பெற வேண்டும்.

எனவே தவிசாளர், துணைத் தவிசாளர் இணைந்து மாதா மாதம் முகாமைத்துவ கூட்டத்தை கூட்டி சபைகளின் துறை சார் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து அபிவிருத்தி செய்ய வேண்டும்.

ஆகக்குறைந்தது 2 வருடத்தில் 12 கூட்டங்கள் நடாத்தப்பட்டிருப்பதனை செயலாளர் உறுதி செய்ய வேண்டும்.

இவ்முகாமைத்துவ கூட்டம் நாடாத்த எச்சபையும் சுவர்ணபுர திட்ட விருது வழங்கும் நிகழ்வில் சேர்த்துக்கொள்ள பட முடியாத நிலையேற்படும் எனவே கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து வடக்கு உள்ளூராட்சி முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

பெர்பெக்ட் அறிவுறுத்தலை பின்பற்றிய செயலாளர் உத்தியோகஸ்தர்களுக்கு கற்கை நெறியின் பின்னர் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்தமாதம் இன்னொரு கற்கை பயிற்சி அபிவிருத்தியாளர்களுக்கு நடத்தப்படும் என டிலான் மேலும் அறிவித்தார்.

# 18ஆவது திருத்தத்திற்கு ஆதரவு; வருத்தமடையும் முஸ்லிம் காங்கிரஸ்

18ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளித்தமைக்காக தற்போது வருத்தமடைவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அந்த கட்சியின் தேசிய அமைப்பாளர் சபீக் ரஜாப்தீன் இதனைத் தெரிவித்தார்.

18ஆம் திருத்தச் சட்டத்தை அமுலாக்குவதற்கு கைகளை உயர்த்தியமை குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தற்போது வருத்தமடைகிறது.

இந்த நிலையில் இன்றையதினம் நடைபெறவுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர் பீடகூட்டத்தின் போது, 18 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்ய உதவுவதா? இல்லையா? என்பது குறித்து முக்கிய அவதானம் செலுத்தப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

மேலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தற்போதும் அரசாங்க கூட்டணியிலேயே உள்ளது.

இன்றைய தினம் நடைபெறவுள்ள அரசியல் உயர்பீட கூட்டத்தில் வைத்தே, அரசாங்கத்துக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதா? அதில் இருந்து விலகுவதா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

### மரப்...

அமைப்பு தொடர்பான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக ஏற்கனவே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கௌரவமான முறையில் இதுவரை காலமும் எம்மோடு இணைந்து செயற்பட்ட மைத்திரிபால சிறிசேனவின் முடிவு தொடர்பில் கவலையடைவதாகவும் அமைச்சர் டளஸ் அழகப்பெரும மேலும் குறிப்பிட்டார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அரசாங்கம்மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதற்காக சர்வதேச நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிக்கு ஆதரவளிப்பதா அல்லது அந்த முயற்சிகளை தோற்கடிப்பதா என்பது தொடர்பிலேயே இம்முறை தேர்தலின்போது மக்கள் சிந்திக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன, சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வா ஆகியோரும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பிரசன்னமாகியிருந்தனர்.

### ஜனாதிபதியுடன்...

ளர்களது உறவினர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கும் போது, கைதிகளது விடுதலை தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடி வரும் நிலையில், நேற்றுக் காலையும் கலந்துரையாடியுள்ளேன். அதுமட்டுமன்றி, இன்றைய தினம் ஜனாதிபதியை மீண்டும் நான் சந்திக்கவுள்ள நிலையில், இதுவிடயம் தொடர்பில் மீண்டும் கலந்துரையாடவுள்ளேன்.

குறித்த இவ்விடயமானது சட்டம், ஒழுங்குடன் சம்பந்தப்பட்டது. ஆகையால், கலந்துரையாடலில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி சாதகமான பதிலைப் பெற்றுத் தருவேன்.

இதுவொரு நீதிமன்றத் தீர்ப்பு என்பதால், இரு நாடுகளுக்கு இடையேயான கைதிகள் பரிமாற்றம் இடம்பெற்ற நிலையில் இந்தியாவுக்குள்ள சட்டம் வேறாகவும், எமது நாட்டிற்குரிய சட்டம் வேறாகவும் உள்ளது. எனது மக்கள் என்ற வகையில் கைதிகளின் விடுதலை தொடர்பில் சாதகமான முடிவைப் பெற்றுத் தருவேன் எனவும் தெரிவித்தார்.

இதனிடையே, அமைச்சரின் அலுவலகப் பிரதான வாயிலுக்கு வருகை தந்திருந்த கடற்றொழிலாளர்களது உறவினர்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கண்டதும் கதறி அழுது, தமது உறவினர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கையினை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

### யாழ்ப்பாண...

னது துரதிஸ்டவசமானது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இது ஒரு புறக்கணிப்பு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### பொது...

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்திருக்கின்றமை மகிழ்ச்சி தருகிறது. காரணம், அன்றையதினம்தான் பண்டாரநாயக்கவின் பிறந்ததினம். அவரது கட்சிக்கு புத்துயிர் கிடைக்கும் தினமாக அன்றைய தினம் அமையவிருப்பதால், பண்டாரநாயக்கவின் ஆசை நிறைவேறும் எனவும் அவர் தெரிவித்தார்.

### எதிர்க்கட்சி...

பட்டுள்ளது.

பொதுக் கூட்டணிக்கான சின்னம் தொடர்பில் இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

தற்போதைக்கு சின்னம் தொடர்பாக கட்சிகளின் பிரதிநிதிகள் இடையே கலந்துரையாடல் நடைபெறுகின்றது.

பெரும்பாலும் ஏழை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சின்னங்களில் ஒன்றே எதிர்க் கட்சிகளின் பொதுச்சின்னமாக அறிவிக்கப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கொட்டடி வாசிக்கு அதிஷ்டம் கைக்கெட்டியது

(திருநெல்வேலி)

கடந்த 19 ஆம் திகதி புதன்கிழமை அதிஷ்டம் பார்க்கப்பட்ட 'சனித்தால' அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் கொட்டடியைச் சேர்ந்த ஒருவருக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணப்பரிசு கிடைத்துள்ளது.

காரைநகர் வீதி, கொட்டடியைச்சேர்ந்த இவர், யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் அதிஷடலாபச் சீட்டுக்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ள எஸ். கே. திலகவதி என்பவரிடம் அதிஷ்டத்துக்குரிய இச் சீட்டைபெற்றிருந்தார். (137)

# நெல்லில் மடிச்சுக்கட்டி சண்டிலிப்பாயில் அதிகரிப்பு

(வலி.தெற்கு)

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நவாலி, கட்டுடை, சங்குவேலி வழுக்கையாறு ஆகிய பிரதேசங்களில் நெற்பயிர்கள் மடிச்சுக்கட்டி நோயின் தாக்குதலுக்கு முழுமையாக உள்ளாகியுள்ளன.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெரும் பணச்செலவில் மருந்துகள் விசிறி வருகின்றனர்.

எனினும் கடுமையான மழையின் தாக்கத்தினால் விசிறிய மருந்துகள் பயனற்றும் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசினால் கமநல சேவைகள் நிலையமூடாக வழங்கிவரும் மானிய உரம் தரம் குறைந்ததாகவும் தரமான உரங்களை வெளியில் பணம் கொடுத்து வாங்கிவருவதாகவும் நவாலி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# சாரதிகள், நடத்துனர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினால் பெண்கள் வன்முறை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு தனியார் சிற்றூர்திகளில் கடமையாற்றும் சாரதி, நடத்துனர்களுக்கு பெண்கள் வன்முறை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை (29.11) மற்றும் ஞாயிற்றுக்கிழமை(30.11) ஆகிய இரு தினங்களும் காலை 10 மணி முதல் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விழிப்புணர்வுக்கருத்தரங்குகளில் யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்தி சாரதி, நடத்துனர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் எஸ்.கெங்காதரன் அறிவித்துள்ளார்.

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் விபத்து

(கணவாய்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதில் நெல்லியடியைச்சேர்ந்த மரியதாஸ் தொம்சன் (வயது 24) என்ற இளைஞரே படுகாயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற பிரஸ்தாப இளைஞர் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வல்லை வெளிப் பகுதியில் மின்கம்பத்துடன் மோதியுள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை 5.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.(18)

### அரசிலிருந்து...

முற்பட்டனர். எனினும் முடியாது போனது. இறுதியாக கடந்த முறை போலவே எங்களுடன் இருந்த ஒருவரை தேடிக் கொண்டனர்.

எனவே நாங்கள் அனுதாபப்படுகிறோம். நாங்கள் இன்றும் அழைக்கின்றோம் மீண்டும் ஒரு முறை வருமாறு. எங்களுக்கு தெரியும் சிலர் இதய சுத்தியுடன் செல்லவில்லை என்று. அவ்வாறானவர்கள் மீண்டும் வந்து, நாட்டு மக்களை காப்பாற்றும் வேலைத் திட்டங்களுக்காக இணைந்து கொள்ளவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

### இலங்கையில்...

சுதந்திரக் கட்சியை விட்டு பலர் பிரிந்து சென்றிருந்ததாகத் தெரிவித்த அமைச்சர், அனைவரும் அரசியல் ரீதியாக வங்குரோத்து நிலையை அடைந்ததாகவும் கூறினார்.

ரணில் விக்ரமசிங்கவை நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமராக பதவியில் அமர்த்தவேண்டிய தேவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளகர்களுக்கு இல்லை எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

சவால்கள் நிறைந்த சூழலில் மேலும் மேலும் பலமடைந்த கட்சி என்ற வகையில் தற்போதைய நிலைமை ஜனாதிபதி மகஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியை உறுதிப்படுத்தியுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறினார்.

இதேவேளை, மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டுச் சென்றாலும் தான் போகப்போவதில்லை எனவும் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

# மூன்று நிபந்தனைகளை அடுத்தே பொதுவேட்பாளராக மைத்திரிபால

## ஐ.தே.க தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையின் பின்னர் ஏற்பட்ட பிரதானமான மூன்று உடன்பாட்டின் அடிப்படையில் கட்சியின் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன ஏற்றுக்கொள்ளப்பட்டார் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக குறிப்பிட்டார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கி, பாராளுமன்றத்துக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய பிரதமர் ஆட்சி முறையொன்றை ஏற்படுத்துதல், 17 ஆவது திருத்தச் சட்டத்தை பலப்படுத்துதல், புதிய தேர்தல் முறைமையொன்றை அறிமுகம் செய்தல் போன்ற மூன்று அம்சங்களே அவை.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில் அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரில 20 இற்கும் மேற்பட்டோர் எதிர்க் கட்சியில் இணைந்துகொள்ளவுள்ளனர்.

அடுத்துவரும் ஓரிரு தினங்களில் இதனைக் கண்டுகொள்ள முடியும் இந்தத் தேர்தலிலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலைப் போன்று பொதுச் சின்னத்தில் போட்டியிட எதிர்ப்பார்ப்பதாகவும் கட்சியின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

# அமைச்சரவை பாதுகாப்பு மைத்திரிக்கு விலக்கம்



எதிரணியின் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மைத்திரி பால சிறிசேனவிற்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு நேற்றுக் காலை முதல் குறைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

ஏதிரக்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிடுவதற்காக அவர் நேற்று முன்தினம் அமைச்சுப் பதவியில் இருந்து விலகி இருந்தார்.

இதனை அடுத்தே அவருக்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சர்களுக்கான பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படுகின்ற பாதுகாப்பு அவருக்கும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரணிலை பிரதமராக்கும் திட்டம் அடுத்தவாரம் உடன்படிக்கை



ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடும் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றால் அவரது அரசாங்கத்தின் பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை நியமிக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கத்திற்கு அமைவான புரிந்துணர்வு உடன்படிக்கை அடுத்த வாரம் கையெழுத்திடப்பட உள்ளது.

அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகள் உள்ளிட்ட 32 தரப்பினர் இந்த இணக்கப்பாட்டு உடன்படிக்கையில் கையெழுத்திட உள்ளனர்.

சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தேசிய கொள்கை ஒன்றின் மூலமாக நாட்டை வழிநடத்தி செல்வது இந்த இணக்கப்பாட்டு வேலைத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இதனடிப்படையில், நாடாளுமன்றத்திற்கு அதிகாரங்களை வழங்குதல், ஜனாதிபதியாக பதவியேற்று 100 தினங்களுக்குள் நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்தல், தேர்தல் முறையில் மாற்றம் செய்தல், 18ஆவது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்து, 17ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்தல், ஊடக சுதந்தி ரததை உறுதிப்படுத்துதல் உட்பட பல யோசனைகளை செயற் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

# ஜனாதிபதித் தேர்தலில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்

## தேர்தல்கள் ஆணையாளர் இணக்கம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக பவ்ரல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இதன்பொருட்டு தேர்தல்கள் ஆணையாளர் இணக்கம் தெரிவித்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கூறியுள்ளார்.

இதன் பிரகாரம் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 35 வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் 22 மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவதற்கு திட்டமிட்டிருப்பதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மேலும் கூறினார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுமார் இரண்டாயிரத்து 500 உள்ளூர் கண்காணிப்பாளர்களை பணிகளில் ஈடுபடுத்துவதற்கு எண்ணியுள்ளதாக தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய அமைப்பாளர் ரசாங்க ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

# சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் மூன்றாக உடையும் அபாயம்?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர்வரும் ஓரிரு நாட்களுக்குள் மூன்றாக உடைந்து சிதறும் அபாயத்தை எதிர்கொணடுள்ளது.

தற்போதைய நிலையில் அமைச்சர் பஷீர் சேகுதாவூது தலைமையில் கட்சியின் ஒரு குழுவினர் அரசுடன் நேரடியாக ஐக்கியமாகும் முடிவில் உள்ளனர்.

இன்னொரு குழுவினர் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு வழங்கத் தலைப்பட்டுள்ளனர். பைசல் காசிம், அஸ்லம் மற்றும் ஹரீஸ் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் குழுவில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே பொருத்தமான தருணம் வரும்வரை எந்தப்பக்கத்துக்கும் ஆதரவு தெரிவிக்காமல் காலத்தைக் கடத்தும் யுக்தியைக் கையாள கட்சித் தலைவர் ஹக்கீம் முடிவெடுத்துள்ளார். இதற்கு ஆதரவாக செயலாளர் ஹசனலி, எம்.எஸ். தௌபீக் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஹக்கீமின் அணியில் இருப்பதாக தெரியவந்துள்ளது.

. பெரும்பாலும் எதிர்வரும் புதன்கிழமைக்குள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிளவு குறித்த தகவல்கள் உத்தியோகபூர்வமாக வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# இலங்கையில் பிளவை ஏற்படுத்த மலேசியாவில் திட்டமிட்ட கூட்டமைப்பு

## என்கிறது திவயின

இலங்கையை இரண்டாக பிளவுபடுத்தி ஈழ நாட்டை உருவாக்க வேண்டும் என்ற யோசனைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. மற்றும் வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் ஆகியோர் இணக்கம் தெரிவித்த சம்பவம் குறித்து அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சிங்கள வார பத்திரிகையான திவயின தெரிவித்துள்ளது.

மலேசியாவில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இந்த யோசனை நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், யோசனைக்கு இவர்கள் இணங்கியதாக அங்குள்ள இலங்கைத் தூதரக அதிகாரி ஒருவர் அரசாங்கத்திற்கு அறிவித்திருந்தார் எனவும் திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஈழ யோசனைக்கு இணங்குவது இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தை மீறிய செயல் என அரசாங்கத்தின் உயர்மட்டம் தெரிவித்துள்ளது.

ஈழ நாட்டை உருவாக்க ஐக்கிய நாடுகளின் தலையீட்டின் கீழ் வடக்கு, கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும், வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களும் வாக்களிக்க இடமளிக்கப்பட வேண்டும் என யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர இலங்கையின் அரசின் அரசியல் தலைவர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளின் வெளிநாட்டு பயணங்களை தடைசெய்ய வேண்டும் எனவும் ஜெனிவாவில் தற்போது நடைபெறும் இலங்கைக்கு எதிரான விசாரணையில் தமிழர்களின் இனப்படுகொலை பற்றிய விசாரணையும் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் இந்த மாநாட்டில் யோசனை நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியின் அனுமதியின்றியே அனந்தி சசிதரன் மலேசியாவில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டதாக அரசாங்கத்திற்கு தெரியவந்துள்ளது எனவும் திவயின குறிப்பிட்டுள்ளது.

# அரசியல் சாணக்கியத்தை வெளிப்படுத்திய ரணில் தியாகி

## அத்துரலிய ரத்தின தேரர் புகழாரம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு தியாகி என்று ஜாதிக ஹெல உறுமயவின் தவிசாளர் அதுரலியே ரத்ன தேரர் புகழாரம் சூடியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை அனுப்பியுள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி வாய்ப்பு இருந்தும் நாட்டின் நலன் கருதி ரணில் விக்கிரமசிங்க தனது வாய்ப்பை விட்டுக் கொடுத்துள்ளார்.அதன் மூலம் உரிய நேரத்தில் பொருத்தமான முடிவை எடுத்து தனது அரசியல் சாணக்கியத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

தான் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறுவதைப் பார்க்கிலும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரை களமிறக்கி, எதிர்க்கட்சிகளை ஒன்றிணைப்பதில் ரணில் வெற்றி கண்டுள்ளார்.

இது அவரது சாணக்கியத்தை மட்டுமன்றி நேர்மையையும் தியாகத்தையும் வெளிப்படுத்துகின்றது. இதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன் என்றும் அதுரலியே ரத்ன தேரரின் அறிக்கையில் தெரிவிககப்பட்டுள்ளது.

பொது அபேட்சகருடன் கொள்கை ரீதியிலான உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள ஹெல உறுமய கட்சி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இது தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கான கட்சியின் செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளதாகவும் அத்துரலிய ரத்ன தேரர் குறிப்பிட்டார்.

# பாப்பரசரின் இலங்கை விஜயம்: கவனம் செலுத்தும் வத்திக்கான்

(கொழும்பு)

பரிசுத்த பாப்பரசர் முதலாவது பிரான்ஸிஸ் இலங்கைக்கு வருகைதரும் தினத்துக்கு நெருக்கமான நாளில், ஜனாதிபதித் தேர்தல் தினம் குறிக்கப்படும் என்று தாம் எதிர்ப்பார்க்கவில்லை என இலங்கை கத்தோலிக்க சபை தெரிவித்துள்ளது.

பதுளை பேராயர் வணக்கத்துக்குரிய வின்ஸ்டன் பெர்ணான்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பாப்பரசர் வருகையின் 10 நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்ற எதிர்ப்பார்ப்பு நிலவியது.

குறித்த 10 நாட்களுக்குள் நாட்டில் இயல்பு ஏற்படும் என்ற அடிப்படையிலேயே இந்த திகதி நிர்ணயிக்கப்பட்டது. எனினும் தேர்தல் திணைக்களத்தின் புதிய அறிவிப்பு குறித்து வத் திக்கான் கவனம் செலுத்தியுள்ளதாக பதுளை பேராயர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே பாப்பரசரின் விஜயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் தற்போதைய அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப வத்திக்கானின் இறுதித் தீர்மானம் வெளியிடப்படும் என்று பதுளை பேராயர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.